குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

ர் 22 ] சோபகிருது ஆண்டு புரட்டாசித்திங்கள் 10—10—63 [ இத



ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி

தருமையாதினக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

காண்பதும்பொய் கேட்பதும்
பொய்
காரியம்போ லேயிதமாய்ப்
பூண்பதும்பொய் எவ்விடத்தும்
போகமும்பொய்-மாண்பாகத்
தோற்றியின்ப வெள்ளமாய்த்
துன்னிஎன்னுட் சம்பந்தன்
வீற்றிருப்ப தொன்றுமே
மெய். (10)

ஆசிரியர் :-

வித்துவான்,

சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சோ. சிங்காரவேலன், M. A.,

உ

குருபாதம்

# " ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 | 10-10-63 | இதழ் 11

## உட்பொருள்

எண் பக்கம்

1 'சமய ஒருமைப்பாடு' ... 565

2 "வாழ்க நல்லறங்காவலர் !" ... 569

3 வணக்கம் ... 572

4 ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ... 573

5 தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள் ... 581

6 சிவஞானபோதச் சிற்றுரை ... 585

7 மணிமேகலை ... 589

8 சஹஸ்ராகமம் ... 593

9 அருள்வாக்கு - II ... 597

10 சித்தாந்த வினவிடை ... 600

11 திருவள்ளுவரும் அன்புடைமையும் ... 606

12 அப்பர் நெறியில் அமரகவி ... 611

13 மதிப்புரை ... 616

14 செய்திகள் ... 618

15 எதிர்காலம் ... 625

### அட்டைப்பட விளக்கம்

தருமையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு 18—10—63 முதல் நவராத்திரி விழா நடைபெறும்.

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 22 ] சோபகிருது-புரட்டாசி-10—10—63 [ இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## 'சமய ஒருமைப்பாடு'

நம் பாரதநாடு ஆத்மீக ஞானத்தில் தலைசிறந்து நிற்கும் பேருநாடு. கோடிக் கணக்கான ஆண்டுகளாக இந்தத் தத்துவநேறியில் தனக்கேன ஒரு சிறப்பிடம் கோண்டு விளங்கும் திருநாடு. எல்லா மதங்களையும் ஒப்பக்கோண்டு குறிக்கோள் மறவாது பரம்போருளைப் பரவிவருவது நம் சான்றோர் மரபாகும். இன்றும் நம் பாரத அரசு மதச் சார்பற்ற அரசாக இருந்து வருகின்றது. மதச் சார்பற்ற அரசு என்ருல் மதப் பற்றற்ற அரசு என்று போருளன்று. எல்லா மதங்களையும் ஒப்பக்கோள்ளும் அரசு என்பதே

அதன் பொருள் என்று மதுரையில் நம் பாரதக் குடியரசுத் தலைவரும், தத்துவப் பேரறிஞருமாகிய டாக்டர். இராதா கிருஷ்ணன் அவர்கள் கூறியுள்ள விளக்கம் அனைவரும் உளங்கொளற்குரிய உண்மையாகும். அன்றியும் "நாம் அனைவரும் ஒரே குலம் என்று உணர்தல்வேண்டும். நிழல் களைக் குறித்து நாம் போரிடலாகாது. அந்நிழல்களினூடு காணப்பெறும் மெய்ப்பொருள் எது என்று தேர்ந்து பயன் கொள்ளவேண்டும்" என்றும் ஜனாதிபதி அவர்கள் தொடர்ந்து வற்புறுத்தியுள்ளார். அன்றியும் இராமேசுவரத்தில் விவேகானந்தர் நினைவுச்சின்னத்தைத் திறந்துவைத்துப் பேசும்போதும் இக்கருத்தை மிக அழகுற விளக்கிச் சமய ஒருமைப்பாட்டை நிறுவியுள்ளார்.

பாரத நாட்டின்மீது உலகமெல்லாம் விழிவைத்து நோக்கிநிற்கும் இவ்வேளையில், உலகிலுள்ள மனிதக் குலத்திற்கே தரும் அறிவுரையாக நம் ஜனாதிபதியவர்களின் தெளிவுரை அமைந்துள்ளது. சர்வமத மாநாட்டில், வீறு கொண்டு உரையாற்றிய விவேகானந்தருடைய சீரிய சொற்பொழிவைக் குடியரசுத் தலைவரின் பேச்சு நினைப்பூட்டு கின்றது.

பாரத நாட்டின் பழம்பெருந் தத்துவநெறியாகிய சைவ சித்தாந்தச் செந்நெறியில் இத்தகு விரிந்தநிலையைச் சாத்திர தோத்திரங்களில் காணலாம். எல்லாச் சமயங்களையும் ஒப்ப மதிக்கும் உயர்ந்த போக்கு உடையது சித்தாந்த சைவம். சிவஞானசித்தியாரில் அதன் ஆசிரியராகிய அருணந்திசிவாசாரிய சுவாமிகள்,

" அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறி யிறந்தங்கு
அறிவினில் அருளால் மன்னி அம்மையோ டப்ப னுகிச்
செறிவொழி யாது நின்று சிவனடி சென்னி வைப்பாம் "

என்று அருளியுள்ள திருவிருத்தம் இங்கு அறியத்தக்கது. "ஆறுவகைப்பட்ட சமயத்திலும் அவ்வந் நெறியாளர்களும் வணங்கும் பரம்பொருள் ஒன்றே" என்ற கருத்தை இவ்விடத்துக் காணலாம்.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

என்றும் நம் சாத்திரம் பேசுகின்றது. இத்தகைய உயர்ந்த உலகத் தத்துவமாக சித்தாந்த சைவம் விளங்குவதை அன்புலகம் நன்கறியும். இது மட்டுமோ? திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்கில், இவ்வுயர் கருத்து ஆங்காங்கு ஒளிவிடுவதை நன்கு உணரலாம்.

"போற்றுந் தகையன பொல்லா முயலகன் கோபப்புன்மை
ஆற்றுந் தகையன ஆறுசமயத் தவரவரைத்
தேற்றுந் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன இன்னம்பரான்றன் இணையடியே"

"ஆறு சமயங்களிலும் உள்ள நெறியாளர்களைத் தெளிவுறுத்துவதும், தெளிந்த அவ்வத் தொண்டர்களைச் செந்நெறிக்கண் ஏற்றுவதும் ஆகிய அருட்செயல்களை உடையன இன்னம்பர் என்னும் திருத்தலத்து எழுந்தருளியுள்ள இறைவனுடைய திருவடிகள்" என்று இத்திருவிருத்தத்துள் அப்பரடிகள் விளக்கியுள்ளார்கள்.

"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம்செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்றதாகும்"

என்பதும் சுவாமிகளுடைய மற்றொரு வாக்கு. 'ஒரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த ஆராவின்ப அருங்கனி பிழிந்து சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுது" என்ற குமரகுருபர சுவாமிகள் திருவாக்கும் இங்கு நினையத் தக்கது.

சமயங்களிடையே காணப்பெறும் இத்தகு ஒருமைப்பாட்டை அறிவுலகு நன்கு ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.

இச்சமயஒருமைப்பாட்டுணர்ச்சி முதலிய அனைத்தும் நம் தேசீய ஒருமைப்பாட்டிற்கு அடிப்படையாவன என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

எல்லா மதங்களும் ஒரே பரம்பொருளை நோக்கிச் செல்லும் திறன் உடையவை. ஒரு பேரூர்க்குச் செல்லும் வெவ்வேறு வழிகளைப்போன்றவை அவை என்பது திருமூலர் கருத்துரை. இந்த மனநிலை-தெளிந்த நன்னிலை-கற்றுணர்ந் தடங்கிய சான்றோர்க்குக் கைவந்த ஒன்றாகும்.

சான்றோர் காட்டும் இந்நெறி நின்றால் போட்டி, பூசல் முதலியன இன்றிச் சமுதாயம் இன்பம்அடையும்; இன்றுள்ள உலகநிலையில் இத்தகு தெளிவுரைகளைப் பேரறிஞர்கள் அடிக்கடி உரைத்துவருதல் உலக நன்னெறிக்குற்ற உயர் துணை என்று வெளிப்படக் கூறுதல் வேண்டா. இத்தகைய சமய ஒருமைப்பாட்டை நம் சித்தாந்த சைவம் தழுவிநிற்றலை அனைவரும் உணர்தல் வேண்டும்.

தக்கசமயத்தில், தமிழ் நாட்டில் உயிர்த் தலமாகிய திருவாலவாய்த்திரு நகரில், 'வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் பெருகிச் செழித்த திருப்பதியில், ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் அங்கயற்கண்ணம்மையோ டமர்ந்த அருள் பூமியில், நம் குடியரசுத் தலைவராக விளங் கும் தத்துவப் பேரறிஞர் அவர்கள் அறிவுறுத்தியுள்ள இவ் வுண்மைகளை மனமகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம். இந் நெறி நின்று மக்கள் பயன் பெருக்கி, என்றும் இன்பம் பெருகும் இயல்பினால் ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை ஏத்துகின்றோம்.

" சமய மேலாறு மாகித் தானொரு சயம்புவாகி
இமையவர் பரவியேத்த இனிதின் அங்கிருந்தஈசன்
கமையினை உடையராகிக் கழலடி பரவுவார்க்கு
உமையொரு பாகர்போலும் ஒற்றியூருடையகோவே"

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

# "வாழ்க நல்லறங்காவலர்!"

காந்தியடிகள் பிறந்த திருநாளில், இவ்வாண்டில் தமிழ் நாட்டு முதலமைச்சராகப் பணியேற்கும் பேருவாய்ப்பு நம் தமிழ்நாட்டு அமைச்சரும், நல்லறங்காவலருமாகிய கனம். திரு. பக்தவத்சலம் அவர்களுக்கே வாய்த்துள்ளது. அமைச்சரவர்கள் தமிழ் நாட்டிற்கே பெருமைதரத்தக்க சிறப்பியல்புகள் பலவும் உடையவர்; நம் பாரதப் பண்பாடு களில் அழுந்திய பற்றும், உறுதியும் வாய்ந்து சிறந்தவர்; குருபீடங்களினிடத்துக் குறையாத பக்தி உடையவர்; இத் தகைய காந்தீய நெறியாளரை முதலமைச்சராகக் கோள்ளும் பெருமை தமிழ்நாட்டு அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளது பெருஞ்சிறப்பாகும். பழைய பெருந்தொண்டர் திலகராகிய புதிய முதலமைச்சரை வரவேற்று மகிழ்கின்றோம்.

சிறந்த செயல்வீரரும், காந்தீய நெறியாளருமாகிய கனம். காமராஜர் அவர்கள், தம்முடைய சீரிய மதிநுட்பமும் திட்பமும் தோன்றப் பல திட்டங்களைத் தீட்டி எல்லாத் துறையிலும் தமிழகத்தைத் தலைநிமிர வைத்ததுடன், இன்று உருவாகிவரும் நவ பாரதத்தையும் செழிக்கவைக்கும் உயர் நோக்குடன் பதவியிலிருந்து விலகியிருக்கும் தியாக நோக்குப் பலர் பாராட்டிற்குரியதாகும். உலகப் புகழ்பெற்ற எல்லா நாடுகளிலும், இன்று கனம். காமராஜர் அவர்களின் புகழும் பரவியிருக்கக் காண்கின்றோம்; உலக இராஜதந்திரி களில் ஒருவராக உயர்ந்துள்ள அரசியல் மேதையாக அவர் திகழ்கின்றார். அவருடைய அமைச்சரவையிலும் போறுப் பேற்றுப் பல பணி நலம் கண்டவர் திரு. பக்தவத்சலம் அவர்கள்; நாட்டு விடுதலைப் போராட்டத்தில் நற்பங்கு பற்றிச் சிறையிருந்த செம்மல் அவர்; அடிமைத்தளையி னின்று பாரத அன்னை வீடுபட்டு இன்ப வாழ்வில் ஒளிபூக்க

தொண்டு பல புரிந்த தூய தேசபக்தர் அவர்; அச் செம்மலா ருடைய அரும்பண்புகள் அனைத்தையும் விளக்கக் காலமும் இடமும் போதா. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களால் அறக்கடவுளாக விளங்கும் மாயூரம் வள்ளலார்கோயில் தென்முகக்கடவுள் திருமுன் வழங்கப்பெற்ற 'நல்லறங் காவலர்' என்ற அந்த ஒரு தொடர்போதும்; அமைச்ச ரவர்களுடைய அரும்பண்புகள் அனைத்தையும் இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கும் உயர்மொழி இது.

அமைச்சர்கள் என்றால் எப்படி இருக்கவேண்டும் என்று திருவள்ளுவரும் கம்பரும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்! கருவி, காலம், செய்யும் அரிய செயல் ஆகியவற்றால் சிறந்த அமைச்சர், வன்கண்மை, குடிகாத்தல், கற்றறிதல், ஊக்கம் முதலிய நற்பண்புகளுடன் திகழ்தல் வேண்டும் என்று தெளிவுறுத்துவார் திருவள்ளுவர்; அத்துடன் சொல் வன்மையையும் வற்புறுத்துவார்; கம்பரோ, 'உற்றது கொண்டு மேல்வந்து உறுபொருள் உரைக்கும் கோட்பாடு உடையவராய், அது வினையின் வந்ததாயினும் மாற்றும் ஆற்றல் பெற்றவராய், பிறப்பின் மேன்மைப் பெரியவராய், அரியநூலும் கற்றவராய், மானத்தில் கவரிமானைப் போன்ற வராய் இருப்பவர் அமைச்சர் என்று இலக்கணம் விரிப்பார்; இவ்விருபெருஞ்சான்றோருடைய இலக்கணத்திற்கும் இலக் கியமாக விளங்குபவர் திரு. பக்தவத்சலம் அவர்கள்.

சேக்கிழார் குடியிற் பிறந்து செந்தமிழைச் சிறக்கக் கற்று, சட்டம் பயின்று, அநுபவத்தாற் சிறந்தவர்; ரஷ்யா முதலிய பிறநாடுகளுக்கும் சென்று உலகாநுபவம் சிறந்து, சர்வதேச அரங்கில் தமிழகம் புகழ்பெற வேண்டும் என்று உழைத்து வரும் உத்தமர். நல்லறநெறியில் நாடு காவல் புரியும் நயத்தக்க நாகரிகம்உடைய நல்லவர். அனைவரையும் கவரும் எளிமையும், இன்முகமும், இன்சொல்லும் நிறைந் தவர். சட்டசபை விவாதங்களில், எதிர்க்கட்சியினர்க்கு, வெல்லும் சொல் இன்மை யறிந்து விடையிறுக்கும் வித்தகர்;

திருக்குறள் முதலிய தமிழ் நூல்கள் மாட்டும், திருமுறைகள்; திவ்யப்பிரபந்த முதலிய தெய்வச் சமய நூல்கள் மாட்டும் அயரா அன்புடைய தமிழ் அன்பர்.

சோழ நாட்டின் முதலமைச்சராக விளங்கிய சேக்கிழார் மரபில் வந்த அமைச்சர் அவர்கள் இன்று தமிழ் நாட்டிற்கே முதலமைச்சராக விளங்குவது அவ்வுயர்குடிக்குற்ற அருந்தவப்பேறு என்பதற்கு ஐயம் சிறிதும் இல்லை.

இத்தகு பெருமைகள் பல உடைய முதலமைச்சர் அவர்களுக்கு ஆட்சிப் பொறுப்பேற்ற அந்நாளிலேயே ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருவுளப்படித் திருவருட் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. பிணி நீக்கத்திற்குரிய வேளூர்ப் பிரசாதமும், காலபயம் நீக்கத்திற்குரிய கடவூர்ப் பிரசாதமும், சமயம் தழைக்கும் மாண்பிற்குரிய காழிப் பிரசாதமும், இறைவன் அருட்காட்சி பெற ஐயாற்றுப் பிரசாதமும், தமிழ்த் தொண்டும் எளிமைப் பண்பும் செழிக்க ஸ்ரீ சொக்கநாதர் பிரசாதமும் முதல் அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்ட திருவுள்ளப் பொருத்தத்தை எண்ணி மகிழ்கின்றோம்.

தமிழ்நாட்டு அரசை எல்லாத் துறையிலும் உயர்த்தும் வல்லமை உடைய நம் புதிய முதலமைச்சரவர்களை வருக, வருக, என்று வரவேற்று 'வாழ்க நல்லறங்காவலர்! என்று வாயார - உளமார மனங்கனிந்து வாழ்த்துகின்றோம்'

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

A wonderful experience of godliness.

(Sd.) Meenakshisundaram,

7—9—63 Asistant Secretary,

Education Department, Government of Madras.

# வணக்கம்

அன்பு உலகின் தெய்விகசக்தி ; அன்பு நெறியில் உலகம் செழிக்கின்றது ; அன்பின் வழியது உயிர்நிலை ; அன்பினால் இன்பம் வளர்கின்றது ; இன்பத்தால் உயிர் ஓங்குகின்றது ; தூய அன்பாகிய வலையில் இறைவனும் சிக்குகின்றான். எல்லாம் அன்புமயம். இந்தத் தத்துவத்தை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தங்கள் பதினோராம் திருமுறை அருளுரையில் விளக்கி யிருக்கின்றார்கள். காரைக்காலம்மையாரின் இறவாத இன்ப அன்பைத் தக்க பல மேற்கோள்களுடன் நிறுவுகின்றார்கள்.

ஜனாதிபதியவர்களின் தமிழ் நாட்டுச் சொற்பொழிவுகள் தத்துவசாரமாக இருந்தன. அவைபற்றிய விளக்கமும், புதிய முதலமைச்சர் " நல்லறங்காவலர் " கனம். M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்களுக்கு வாழ்த்தும் சிறப்பிடம் பெறுகின்றன குறிக்கோளுடன் கூடிய வாழ்வு பெற்ற மனிதனின் சிறப்பை தம் வானொலிப்பேச்சில் திரு. அ. ச. ஞானசம்பந்தம் M.A., அவர்கள் நிறுவியுள்ளார்கள். திருவள்ளுவரது அன்புடைமையையும் பாரதியாரது ஆன்ம வீரத்தையும், ஆராய்கின்ற கட்டுரைகள் புத்தின்பம் தருபவை.

சித்தாந்த வினாவிடையும், தொல்காப்பிய விளக்கமும், சிவ ஞான போத உரையில் வரும் இலக்கண விளக்கமும் குறிப்பிடத் தக்கவை. மணிமேகலை இலக்கிய நாடகத்தில் நகைச்சுவைக் காட்சி விரிகின்றது.

அன்பர்களின் முன்பு இந்தவிதழை இந்நறுமணம் கமழக் கமழ வைக்கின்றோம். எல்லாம் குருவருளால் வந்த விளக்கந் தான்.

உ
குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

திருச்சிற்றம்பலம்

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் — சுடர்உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அன்பறா தென்னெஞ் சவர்க்கு.

திருச்சிற்றம்பலம்

— காரைக்காலம்மையார்

ஆரேனும் காண்பரிய ஆண்டவனாகிய இறைவனை அடைவிப்பது அன்பு ஒன்றே; அன்பு இல்லாதபொழுது, ஏனைய தவம், தானம், தியானம், யோகம், பூசை முதலிய யாவும் பயனளிப்பது இல்லை. இதனை அருளாசிரியர் அனைவரும் நன்கு உணர்த்திப் போந்தனர்,

" உள்ளம் உள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ளம் உள்ளவ ருக்கருள் வானலன்
வெள்ள மும்அர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே "

" நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும்நீ ருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே "

என்பன அப்பர் திருவாக்குகள்.

" யாவ ராயினும் அன்ப ரன்றி அறியொணு
மலர்ச்சோதியான் "

என்று அருளுகின்ருர் மாணிக்கவாசகர்.

" என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தலொண் ணுதே "

என்கின்றது திருமந்திரம்.

" அன்பேஎன் அன்பேயென் றன்பால் அழுதரற்றி
அன்பேஅன் பாக அறிவழியும் — அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்வதெல்லாம்
சாத்தும் பழமன்றே தான் "

எனச் சாத்திரமும் ( திருக்களிற்றுப்படியார் ) கூறிற்று.

உலகியலில் எத்துணைத் தாழ்ந்தவராயினும், இறைவனிடத்தில் அன்பு ஒன்றை உடையவராய் இருப்பின் அவர்களிடத்து இறைவன் தானே வந்து தலைப்பட்டு ஆட்கொள்கின்ருன்.

" ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணு அரன் "

என்பது திருக்களிற்றுப்படியார். " ஆரேனும் தன்னடியார்க்கு அன்பன் தன்னை " என்ற திருநாவுக்கரசர் திருமொழி இதற்கு மூலமாய் நிற்பது.

மனே வாக்கு காயங்களுக்கு அப்பாற் பட்டவனுகிய இறைவன் பக்தி என்பது ஒன்று இருக்குமாயின், அதன்கண் தானே வந்து அகப்படுகின்ருன் என்னும் உண்மையைத் திருவாசகத்திற் காண்கின்ருேம் :

" சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க " ( திருவாசகம் )

ஆகவே, அன்பின் பெருமை அளப்பரிதாகும்.

" அன்பெனும் தன்மையொன்றை அமரரும் அறிந்த தன்ருல் " என்றனர் கம்பர்.

இத்துணைப் பெருமை வாய்ந்த அன்பினை இறைவனிடத்துச் செலுத்துங்கால், அஃது இருவகையாக நிகழும்; ஒன்று யாதேனும் ஒருபயன் கருதி நிகழ்வது; மற்றொன்று பயன் கருதாது நிகழ்வது. இவை முறையே, "காமிய பக்தி; நிட்காமிய பக்தி" எனப்படும். உயிர்களுக்குப் பொதுவாக இறைவனிடம் முதற்கண் காமிய பக்தியே நிகழும்.

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்" என்ற மணிவாசகத்தின்படி, தேவர்களும் இறைவனிடத்தில் எவையேனும் சில பயன் கருதியே அன்பு செய்கின்றனர். ஆகவே, உலகில் பொதுவாகக் காமிய பக்தியே மிகுந்து காணப்படும். ஆயினும், அது குற்றம் அன்று; முதற்கண் பயன்கருதி நிகழ்ந்த அன்பு, சிறிது சிறிதாகப் பெருகிப் பின் பயன் கருதாத அன்பாய் மாறும். அதுபற்றியே நாவுக்கரசர்,

> "அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
> நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ."

என்று அருளிச் செய்தார்.

பயன் கருதிச் செய்வதாயினும் இறைவனிடத்துச் செலுத்துகின்ற அன்பு, ஏனைய பொருள்கள்மேல் செலுத்துகின்றது போல, வினையாகி அழிந்தொழியாமல், தவமாகி நிலைத்து நின்று ஞானத்தைத்தரும். இத்தகைய தவத்தின் மிகுதியே கண்ணப்பருக்குப் பயன் கருதாத பேரன்பினை அளித்தது. அதனைச் சேக்கிழார்,

> "முன்புசெய் தவத்தின் ஈட்டம்
> முடிவிலா இன்ப மான
> அன்பினை எடுத்துக் காட்ட"

என்று குறித்தருளினர்.

> "தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
> தயாவைநூ றாயிரங் கூறிட்டு
> அத்தில்அங் கொருகூ றுன்கண்வைத் தவருக்கு
> அமருல களிக்கும்நின் பெருமை"
>
> (திருவிசைப்பா)

என்றபடி ஏனைய பொருள்கள்மேல் செல்லும் விருப்பத்தைச் சிறிது சிறிதாக இறைவனிடத்துச் செலுத்த நாம் முற்படல்

வேண்டும். அந்த விருப்பம் முதலில் பயன் கருதியதாகவும் இருக்கலாம். பிற பொருள்களில் சென்ற விருப்பத்தைச் சிறிது மாற்றி இறைவன்பால் செலுத்தத் தலைப்பட்டபொழுது, இறைவனது பெருமையையும், அவனிடத்தில் அன்புசெய்த அடியார்களது பெருமையையும் நூல்கள் வாயிலாகக் கற்றும் கேட்டும் வருகின்ற செயல்கள் உண்டாகும். அச்செயல்களுக்கு இடையில் மனம் கசிந்து கண்ணீர் பெருகும் நிலை தோன்றும். இவ்வாறே அன்புமுதிர்ந்து, நிட்காமிய பக்தியாகிய பயன் கருதாத அன்பு கைவரும். இந்த நிட்காமிய பக்தியே. 'உண்மை அன்பு, மெய்யன்பு' என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. இந்த மெய்யன்பே பெறுதற்கரியது; யாவரும் பெற வேண்டுவது;

> "வேண்டும் நின் கழற்கண் அன்பு
> பொய்ம்மை தீர்த்து மெய்ம்மை யே"

என்று மாணிக்கவாசகரும் வேண்டினார். அவர் தமக்கிருந்த அன்பினைக் கூறுமிடத்து, "யானே பொய்என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்" எனக் கூறுவாராயின், நம்போன்றவரது அன்பினைப் பற்றி என்ன சொல்வது!

உண்மை அன்பாவது, "இறைவனை வழிபட்டால் இது கிடைக்கும்; அது கிடைக்கும்" என்று எண்ணாது, அவனது அருட்குணங்களில் ஈடுபட்டு, அவ்வீடுபாடு காரணமாகவே அவனுக்குத் தொண்டு செய்தல். அங்ஙனம் செய்தவர்களே நாயன்மார் அனைவரும். அவர்கள் தங்கள் தொண்டுக்குக் கைம்மாருக, வீடும் வேண்டா விறல் உடையவர்களாய் விளங்கினர். அப்பர் பெருமான் தம்மைச் சமணர் கல்லிற் கட்டிக் கடலில் வீழ்த்தக் கொண்டு சென்றபோதும் இறைவனே, இப்பெருந் தீங்கிலிருந்து என்னைக் காத்தருளவேண்டும் என்று வேண்டவில்லை. "எப்பரிசு ஆயினும் ஆக; ஏத்துவன் எந்தையை", என்று நினைத்து, "சொற்றுணை வேதியன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். மற்றும்

> "தன் கடன் அடியேனையும் தாங்குதல்
> என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்றுதான், தமது வாழ்க்கை முழுவதையும் கழித்தார்.

> "வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
> வேண்டேன் மண்ணும் விண்ணும்"

என்றும்,

"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

"காயத் திடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே"

என்றும் போந்த திருவாக்குகளில் மாணிக்கவாசகரது நிட்காமிய நிலை நன்கு வெளியாகின்றது. இவ்வாறே திருமுறைகள் அனைத்திலும் நாம் காண்பது பயன் கருதாத பேரன்பே ஆகும். இவ் வகையில் பதினோராந் திருமுறையில், காரைக்கால் அம்மையார் அருளிச்செய்த மேற்காட்டிய திருவெண்பாவில், இந்நிட்காமிய பக்தி ஏனைய எல்லாவற்றினும் மிக விஞ்சிக் காணப்படுகின்றது.

அம்மையார் இறைவனை வேண்டிப் பேய் வடிவம் பெற்ற உடனே அருளிச்செய்தது அற்புதத் திருவந்தாதி. 'அற்புதம்' என்பது 'ஞானம்' எனப்பொருள்படும். அற்புதத் திருவந்தாதியில் ஞானக் கருத்துக்களே நிரம்பியுள்ளன. அதன் முதல் திருப்பாடலில், அம்மையார் தமது தொண்டின் நிலையை இனிது விளக்கியுள்ளார். அவர் பிறந்து தளர் நடையிட்டு நடந்து பேசத் தொடங்கிய பொழுதே பணியணிவார் கழற்கு அடிமை பழகிவரும் மொழியே பயின்றார். வண்டல் விளையாட்டில் பயிலும் வார்த்தைகளும் அவர்க்கு வளர் மதியம் புனைந்த சடை அண்டர் பிரான் திருவார்த்தைகளாகவே இருந்தன. இதனையே,

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் — நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்."

என்னும் முதல் திருப்பாடலில் குறித்தருளினார். இப்பாடலைப் படிப்பவர்க்கு, பிறந்தது முதல் சிவபெருமானிடத்திலே அயரா அன்புசெய்து வந்த அம்மையார்க்கு இப்பொழுது அதில் சலிப்பு ஏற்பட்டுவிட்டதோ என எண்ணத்தோன்றும். "வானோர் பெருமானே எஞ்ஞான்று தீர்ப்பது இடர்" என்னும் இறுதித் தொடர் அவ்வாறு அமைந்துள்ளது. அவ்வெண்ணத்தை, அடுத்து அருளிய திருப்பாடல் அறவே மாற்றி, அம்மையாரது ஈடும் எடுப்பும் அற்ற பேரன்பினை எவ்வளவு தெளிவாகக் காட்டுகின்றது!

'என்பணிந்த கோலத்தினையும், எரியாடும் செயலையும் உடைய எங்கள் பெருமான், எங்கள் இடரை அறவே களைந்தருள்வான்; ஏன் எனில் எங்களிடத்தில் அவனுக்கு அளவற்ற இரக்கம் உண்டு. அதுநிற்க, அவன் என்போன்ற அடியார்களது துன்பத்தைக் களையாதவனாயினும் ஆகுக. எங்கள்மேல் இரக்கங் கொள்ளாதவனாயினும் ஆகுக; என்மனம் எக்காரணத்தாலோ அவனிடத்துக் கொள்ளும் அன்பினை விடாது பெருக்குவதாகவே உள்ளது' என்று அத்திருப்பாடலில் அருளிச் செய்தார். இவ்வாறு, 'இடர்களையாவிடினும், இரங்காவிடினும் எம் அன்பு இறைவன்பால் நின்று நீங்குவது இல்லை' என்று அருளிய திருவாக்கினை வேறு இடத்தில் நாம் காண்பது அரிது. இறைவன், திருக்கயிலையில் "நம்பால் இங்கு வேண்டுவது என்" எனக்கேட்ட பொழுது, இறவாத இன்ப அன்பை முதலில் வேண்டி, அதன்பின் ஏனையவற்றை வேண்டியவரன்றோ நம் அம்மையார்,

"கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அது வேண்டேன் — துண்டஞ்சேர்
விண்ணாளும் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்கும்
கண்ணாளா ஈதென் கருத்து"

என அவ்வந்தாதியின் மற்றோர் இடத்தில் அம்மையார் தம் கருத்தைத் தெளிவாக விளக்குகின்றார். இத்தகைய இடையறாப் பேரன்பு வாய்த்தல் எளிதன்று. எத்துணையோ பிறப்புக்களில் செய்த தவத்தினாலேயே இது கிடைப்பதாகும். அங்ஙனம் கிடைக்கப்பெற்றவர்கள் வேறொன்றையும் விரும்பாது. அவ்வன்பினையே மேலும் மேலும் விரும்புவர்.

அம்மையார் "அண்டம் பெறினும் அது வேண்டேன்" என்று அருளியது போலவே, ஐயடிகள் காடவர்கோன் நாயனார் சிவனுக்குத் தொண்டுசெய்து ஓடேந்தி உண்பது, படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலாம் ஆளும் முடியரசர் செல்வத்தினும் மூன்று மடங்கு உயர்ந்தது என்கின்றார்.

'மலைபோன்ற செல்வம் வந்து குவியினும் இறைவன் திருவருள் இல்லையேல் அதனை நஞ்சாக நினைப்பேன். அவனது திருவருளால் புழுவாய்ப் பிறக்கினும் அதனைப் பொன்னுலகத்துத் தேவர் பிறப்பாகக் கருதுவேன்' என்பது சேரமான் பெருமாள் நாயனார் பொன்வண்ணத்தந்தாதியில் அருளிய உறுதிமொழி.

நக்கீர தேவ நாயனார், கண்ணப்பர் கதையைக் கேளாது, மானுடர் வாளா பொழுது கழிக்கின்றார். அந்தோ, என்று இரங்கி, அக்கதையை யாவரும் கேட்குமாறு, 'திருக்கண்ணப்ப தேவர் திருமறம்' என விரித்துப்பாடி, அவ்வன்பிலே ஊறித் திளைத்தார். கல்லாட தேவரும் அங்ஙனமே கண்ணப்பர் பேரன்பில் ஈடுபட்டிருந்தார்.

'மனம் ஒருங்கி மலர் தூவிக் கண்ணீர் அரும்பிக் கசிவார்க்குக் காண்பெளியன், தெண்ணீர் சடைக்கலந்த தே' என்று தெரிவிக்கின்றார் கபிலதேவ நாயனார்.

"அன்பே யுடைய அரனே அணையாத
அன்பே யுடைய அனலாடி அன்பே"

என்று இறைவனை அன்பே வடிவாகப் பாடுகின்றார் பரணர்.

சிவபெருமானைப் பலர் எங்கும் தேடித்திரிந்து கிடைக்கப் பெறாமல் வெறுங்கையோடு வந்தார்கள். ஆனால், அவன் தலை மாலையும் சடையில் அணிந்த கங்கையும் ஒற்றைப் பிறையும் எப்பொழுதும் மறையாது தோன்ற என் நெஞ்சத்திருக்கின்றான் என்று வெளியிடுகின்றார் இளம்பெருமான் அடிகள் என்பவர். இவ்வாறு இறைவனையே நினையும் பேரன்பைப் பெற்றுள்ளது அவரது நெஞ்சம்.

"விநாயகரைப் பாடுகின்ற அதிராவடிகளும், வேதத்தின் "முதற்கண் உள்ளவனே, மூன்று கண்களை உடையவனே, நீக்குதற்கரிய பொருளே, கலைகளுக்கெல்லாம் இருப்பிடமே உன்னையன்றிப் பிறிதொருபொருளில் என் அன்பு செல்லாது" என மொழிகின்றார்.

பட்டினத்தடிகள் "மின்னலைப்போன்ற செல்வத்தை விரும்பி வாழும் ஏனையோர் வாழ்க்கையையும், உன் செல்வத் தொண்டர் வாழ்க்கையையும் ஒப்பு நோக்கின், குளப்படி நீரும் பிரளய வெள்ளமும் போலும் ஆதலின், நின்னடியார்க்கு அடியாரது காற்றலை ஏவல் என் நாய்த்தலை ஏற்றுச் செய்வது அல்லது எனக்கு வேறொரு பேறும் இல்லை" எனத் தமது பற்றற்ற உள்ளத்தையும் அடியார்க்கு அடியாராம் அளவற்ற பத்தியையும் விளக்கியுள்ளார். இன்னும், "உழப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்னும் திருப்பாவினுள், நெஞ்சமாகிய மேட்டு நிலத்தைத் திருத்தி, அன்புப்பாத்தி கோலிப் பத்திவித்திட்டுச்

சிவப்பழத்தைப் பெறும் முறையை விரிவாக விளக்குகின்றார். 'குலத்திற் கடையாய்ப் பிறக்கினும் கச்சியுள் ஏகம்பத்து எங்களை ஆளுடையான் கழற்கு அன்பரேல் அவர் யாவர்க்கும் உத்தமரே' என்பதும் அவர் திருவாக்கு.

நம்பியாண்டார் நம்பிகளும், தில்லைக் கூத்தப்பெருமானை, "என்பும் தழுவிய ஊனும் நெகஅகமே எழுந்த - அன்பின் வழி வந்த ஆரமிர்தே" என ஓர் இடத்தில் வாயார வாழ்த்தி, மற்றோர் இடத்தில்,

"ஏழைஎன் புன்மை கருதாது இடையறு அன்பு எனக்கு
— வாழி நின் பாத மலர்க்கே மருவ அருளுகண்டாய்"

என்று வேண்டுகிறார்.

பதினோராம் திருமுறையை அருளியவர்கள், திருவாலவாய்ச் சிவபெருமானைத் தவிர்த்துப் பதினொருவராவர். அப்பதினொரு வர் பாடல்களிலும் இவ்வாறு உண்மை அன்பின் பெருக்கையே காண்கின்றோம். அவைகளில் தலையாய் முன்னிற்பது காரைக் காலம்மையாரது திருவெண்பா. திருவாலவாயுடையாரது திரு முகப் பாசுரமும், தம்மையன்றி வேறு ஒருவரையும் அணுகாத உண்மை அன்பராகிய பாணபத்திரர் பொருட்டு, மற்றோர் உண்மைப் பேரன்பராகிய சேரமான் பெருமாள் நாயனுருக்கு, "தன்போல் என்பால் அன்பன்" எனக் குறித்து எழுதி அருளியதே யாகும். ஆகவே, பதினோராந்திருமுறை முழுதும் அன்பு மயமாய்த் திகழ்கின்றது என்னலாம். அதனை இடையறுது ஓதி, உலகம் இருமைப்பயனும் எய்துவதாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam,

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

One can easily feel that the great cultural and religious life has been preserved in the temples of the south.

(Sd.) METHA,
Songs and Drama Officer,
Information and publicity,
7-9-63 Government of Madhya Pradesh, Bhopal.

" நல்லறங்காவலர் "

கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள்

சென்னை மாநில முதலமைச்சர் பதவியேற்ற அன்று



தருமையாதீனச்சார்பில்

வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ சொக்கநாதர் பிரசாதம் வழங்கிப் பொன்னுடை போர்த்துதல்.

"நல்லறங்காவலர்" கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள்
தமிழ்நாடு முதலமைச்சர் பதவியேற்ற அன்று



தருமையாதீனத் திருக்கோயில்களின் பிரசாதம் வழங்குதல்.

திருபுவனம் மகாகும்பாபிஷேக விழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
மதுரை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்குப் பொன்னுடை போர்த்துதல்

திருபுவனம் மகாகும்பாபிஷேக விழாவில்



கட்டளை மடத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள்
குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திற்குப்
பொன்னுடை போர்த்துதல்.

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 22, இதழ் 9, பக்கம் 468 இன் தொடர்ச்சி )

## (ஈ) ஒரு பொருளில் ஈருருபு மயங்குதல் :

### 1. ஏதுப்பொருள் :

ஏதுப்பொருள், "அதன் வினைப்படுதல் அதனினாதல்" (வேற். 13.) என்னுமிடத்து 'அதனினாதல்' என்பதனால் மூன்றும் வேற்றுமைக்கும், "புதுமை பழமை ஆக்க மென்றா" (வேற். 17.) என்னுமிடத்து 'ஆக்கம்' என்பதனால் ஐந்தாம் வேற்றுமைக்கும் உரியதென வேற்றுமையியலில் கூறப்பட்டது. அதனையே மயக்கமாதல்பற்றி ஈண்டும் கூறுகிறார்.

ஆக்கத்தோடு கூடிய ஏதுப்பொருள் மூன்றும் வேற்றுமையிலும் ஐந்தாம் வேற்றுமையிலும் வரும் என்பதாம். (எ-டு) 'வாணிகத்தானாய பொருள்' என்புழி பொருளிற்கு வாணிகம் ஏதுவாயவாறும், ஆய என்னும் ஆக்கச்சொல் வந்தவாறும், மூன்றனுருபில் இவ்வேதுப் பொருள் விரிக்கப்பட்டவாறும் காண்க. 'வாணிகத்தின் ஆய பொருள்' என்புழி, பொருளிற்கு வாணிகம் ஏதுவாயவாறும், ஆய என்னும் ஆக்கச் சொல் வந்தவாறும், ஐந்தனுருபில் இவ்வேதுப் பொருள் விரிக்கப்பட்டவாறும் காண்க.

இங்ஙனம் ஏதுப்பொருளாகிய ஒரு பொருளின்கண் மூன்றாவதும் ஐந்தாவதும் சென்று மயங்குதலின் இதுவும் பொருள் மயக்கமாயிற்று. (9)

### 2. அச்சப்பொருள் :

அச்சப்பொருள், "நோக்கலின் அஞ்சலின் சிதைப்பி னென்றா" (வேற். 11) என்னுமிடத்து 'அஞ்சல்' என்பதனால்

இரண்டாம் வேற்றுமைக்கும், "தண்மை வெம்மை அச்சம் என்று" (வேற். 17) என்னுமிடத்து அச்சம் என்பதனால் ஐந்தாம் வேற்றுமைக்கும் உரியதென வேற்றுமையியலில் கூறப் பட்டது. அதனையே மயக்கமாதல்பற்றி ஈண்டும் கூறுகிறார்.

அச்சப்பொருள் இரண்டாம் வேற்றுமையிலும், ஐந்தாம் வேற்றுமையிலும் வரும் என்பதாம். (எ-டு) பழியஞ்சும் என்புழி பழியையஞ்சும் என்றும் பழியின் அஞ்சும் என்றும் வருமென் பதாம்.

இங்ஙனம் அச்சப்பொருளாகிய ஒரு பொருளின்கண் இரண் டாவதும் ஐந்தாவதும் சென்று மயங்குதலின் இதுவும் பொருள் மயக்கமாம். (17)

### 3. தடுமாறு தொழிற் பெயர்:

முன்னும் பின்னும் பெயர்ச்சொல்லும். இடையில் ஒரு தொழிற்சொல்லும் இருந்து, அத்தொழிற்சொல் முன்னும் பின்னு முள்ள இருபெயரொடும் இயைதற்கு ஏற்குமேல் அது தடுமாறு தொழிற்சொல்லாம். அத்தடுமாறு தொழிற்சொல்லோடு இயைந் தபெயரைத் 'தடுமாறு தொழிற் பெயர்' என்பர். இத்தொடரை இரண்டனுருபிலும், மூன்றனுருபிலும் வைத்து விரிக்கலாம் என்பதாம். (எ-டு) 'புலிகொல் யானை' என்றவிடத்து கொல் என்னும் தொழிற் சொல், புலி யானை என்னும் இரண்டு பெயர்க் கும் இயைந்தவாறறிக. இத்தொடரை இரண்டனுருபில் வைத்து விரிப்பின் 'புலியைக் கொன்ற யானை' எனப் புலி செயப்படு பொருளாயும், யானை வினைமுதலாயும் வரும். மூன்றனுருபில் வைத்து விரிப்பின் 'புலியால் கொல்லப்பட்ட யானை' எனப் புலி வினைமுதலாயும், யானை செயப்படு பொருளாயும் வரும் என்ப தாம்.

இங்ஙனம் தடுமாறு தொழிற்பெயராகிய ஒரு பொருளின் கண் இரண்டாவதும் மூன்றாவதும் சென்று மயங்குதலின் இது வும் பொருள் மயக்கமாம். (12)

மெய்யறிபனுவல்: 'புலி கொல் யானை' என்ற தடுமாறு தொழிற்பெயரை இரண்டனுருபிலோ, மூன்றனுருபிலோ வைத்து விரித்தாலன்றிப் பொருள் விளங்காது. இந்நிலையில் வினைமுதல் எது? செயப்படுபொருள் எது? எனத் தெரிதற்கு அத்தொட ரின் இறுதியில் வரும் பிறிதொரு சொல்லே கருவியாகும்.

இங்ஙனம் மயங்கிநின்ற பொருளை விளக்கவரும் சொல்லையே 'மெய்யறிபனுவல்' என்பர். மெய்யறி பனுவல் - பொருளின் உண்மையை உணர்த்தவரும் சொல். பனுவல் என்பது ஈண்டுச் சொல்லின்மேற்று. (எ-டு) 'புலிகொல் யானை ஓடியது' என்ற விடத்து ஓடியது என்ற மெய்யறி பனுவலால் யானை வினைமுத லென்றும் புலி செயப்படுபொருள் என்றும் அறியலாம். (13)

4. சினைச்சொல் :

உறுப்பினைக் குறிக்கும் சினைச்சொல்லிற்கு இரண்டாம் வேற் றுமையும், ஏழாம் வேற்றுமையும் உரியதாம். (எ-டு) கோட் டைக் குறைத்தான் எனவும், கோட்டின்கட் குறைத்தான் எனவும் வரும்.

இங்ஙனம் சினையாகிய ஒருபொருளின்கண் இரண்டாவதும், ஏழாவதும் சென்று மயங்குதலின் இதுவும் பொருள் மயக்கமா யிற்று. (2)

5. முதற்சினைக் கிளவி :

முதற் பொருளோடு கூடிய சினைச்சொல்லில், முதற்சொல்லில் 'அது' உருபு வந்தால், சினைச்சொல்லில் 'ஐ' உருபு வருமென் பதாம். அன்றி முதற் சொல்லில் 'ஐ' உருபு வந்தால் சினைச் சொல்லில் 'கண்' உருபு வரும் என்பதாம். (எ-டு) 'யானையது கோட்டைக் குறைத்தான்' எனவும், 'யானையைக் கோட்டின்கட் குறைத்தான்' எனவும் வரும். சிறுபான்மை முதல், சினையாகிய ஈரிடத்தும் 'யானையைக் கோட்டைக் குறைத்தான்' என 'ஐ' உருபு வருதலும் உண்டு. இக்கருத்துக்களைத் தொகுத்தே,

" முதலை ஐயுறிற் சினையைக் கண்ணுறும்
அதுமுதற் காயிற் சினைக்கை யாகும் " (பெயர். 58)

என நன்னூலாரும் கூறியுள்ளார்.

இங்ஙனம் முதற்சினையாகிய ஒரு பொருளின் கண், ஆறாவதும் இரண்டாவதுமாகவோ, இரண்டாவதும் ஏழாவது மாகவோ, சிறுபான்மை இரண்டனுருபே இரட்டித்தோ, சென்று மயங்குதலின் பொருள் மயக்கமாயிற்று. (4, 5)

இதுகாறும் கூறிய முதற்சினைப் பொருள்களை இவையிவை யென வரையறுத்தற்கில்லை. ஒரு பொருளே தனது ஏகதேச

மாகிய உறுப்பை நோக்க முதலாயும், அவ்வுறுப்பே அதனினும் ஏகதேசமாகிய உறுப்பை நோக்க முதலாயும் வருதலின், சொல்லுவான் குறிப்பினாலேயே முதற்சினைப் பொருள்கள் வரையறுக்கப்படுமென்பதாம். (6)

6. பிண்டப் பெயர் :

பல பொருள்கள் சேர்ந்த தொகுதியைப் பிண்டமென்பர். இப் பெயரும் முதற்சினைப் பொருளுக்குரிய வேற்றுமையிலக்கணத்தில் பிழையாது வரும். எனவே பிண்டப் பெயருக்கு 'ஆறுவது' வரின் பிண்டித்த பொருளுக்கு 'இரண்டாவது' வரும். பிண்டப் பொருட்கு 'இரண்டாவது' வரின் பிண்டித்த பொருளின்கண் 'ஏழாவது' வரும். இங்ஙனமன்றி சிறுபான்மை பிண்டப் பொருள் பிண்டித்த பொருளாகிய ஈரிடத்தும் 'இரண்டாவது' வருதலும் உண்டு. (எ-டு) 'குப்பையது தலையைச் சிதறினான்' எனவும், 'குப்பையைத் தலைக்கட் சிதறினான்' எனவும், 'குப்பையைத் தலையைச் சிதறினான்' எனவும் வரும். இக் கருத்துக்களைத் தொகுத்தே,

"முதலிவை சினையிவை யெனவே றுளவில
உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும்" (பெயரியல். 59)

என நன்னூலாரும் கூறுமாறு காண்க.

இங்ஙனம் பிண்டமும் பிண்டித்த பொருளுமாகிய ஒரு பொருளின்கண் ஆறுவதும் இரண்டாவதுமாகவோ, இரண்டாவதும் ஏழாவதுமாகவோ, சிறுபான்மை இரண்டனுருபே இரட்டித்தோசென்று மயங்குதலின் பொருள் மயக்கமாயிற்று. (7)

இதுகாறும் கூறியவாற்றால் தன் பொருளில் தீராது பிறிதொன்றன் பொருட்கண் சேறலும், ஒரு பொருளில் ஈருருபு சென்று சேறலும் பொருள் மயக்கம் என்பது பெற்றாம்.

(தொடரும்)

---

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாங் கல்வி கேள்வியல்லல்
ஒய்வார் சிவானந்த வாரியுள்ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ரகாசன்மெய்த் தொண்டர்களே.

— குருஞானசம்பந்தர்

# சிவஞானபோதச் சிற்றுரை

## இலக்கணக் குறிப்பு — விளக்கம்

சைவசித்தாந்தவித்தகர், வித்துவான்.

திரு. வை. சுந்தரேச வாண்டையார்

( மலர் 22, இதழ் 9. பக்கம் 427 இன் தொடர்ச்சி )

### அதிகரணம் 3.

" விண்படர்ந்தென்னும் உபலக்கணத்தால் நிரயம் படர்ந்தென்பதூஉம் பெறுதும். படர்ந்தெனக்காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ' - என்றார்.

இவைகட்கு விளக்கம் :-

உபலக்கணம் - வாள் எடுத்துப் போர்க்குப் புறப்பட்டனர் என்றவழி, வாள் என்ற சொல் தன் இனமானவில், வேல் முதலிய வற்றையுந் தழுவி நிற்றல். அதுபோல விண்படர்ந்து என்றது - தான் செய்த நல்வினைக் கீடாகத் துய்த்தற்குத் துறக்கத்தில் ( சுவர்க்க உலகில் ) சென்று துய்த்தல் எனவே, தீவினைக் கீடாக நரக உலகிற் சென்று துய்த்தல் என்பதும் பெறவைத்தவாறு. 'படர்ந்து = போய், இங்கே துய்த்தல் என்னும் காரியத்தை படர்ந்து என்னுங் காரணமாக உபசரித்துக் கூறினர்.

" அத்தூடென்புழி அன் சாரியை விகாரத்தாற் றொக்கது. பொருந்தி என்பது சொல்லெச்சம். வினை - ஆகுபெயர் ". என்றார்.

இவைகளுக்கு விளக்கம் :-

அது + அன் + ஊடு = அதனூடு என்பது அத்தூடு என்றுள்ளது.

அத்தூடுபொருந்தி - பூதசாரம் முதலிய உடம்பின்கட் பொருந்தி. இச்சொல் பாட்டில் இல்லை. ஒரு சொல்எஞ்சி நிற்பது சொல்லெச்சம்.

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தாரிறைவ னடிசேராதார்." என்ற குறளிற் சேர்ந்தார் என்பது சொல்லெச்சம். அது அக்குறளில் இல்லை. வினையினுல் என்பது வெண்பாவில் உள்ள தொடர்.

வினை - அதைக் குறிக்காமல் அது காட்டும் கதிநிமித்தங் களைக் குறித்தலால் அது கருவியாகு பெயர்.

"பரவு முதனிலைத் தொழிற்பெயர். இல்லுருபு தொழி னிகழ்ச்சிக்கண் வந்த ஏழாவது" — என்றார்.

## இவைகளுக்கு விளக்கம் :

பரவு + தல். பகுதியே நின்று தொழிற்பெயர் உணர்த் தின் முதனிலைத் தொழிற் பெயராம்.

பரவில் — பரவுதலில். சேறலும் மீடலும் — செல்லுதலு மீளுதலுமாகிய சொல் நிகழ்தல்.

" ஆகாயக் கூத்தாட்டென்பது உவமைத்தொகை; இதனை உம்மைத் தொகையாகக் கொண்டு குடகாய வாகாயமுங் கூத் தாட்டும் போலென்றுரைப்பாருமுளர்" — என்றார்.

## இதற்கு விளக்கம் :-

ஆகாயம் — வெட்டவெளி. ஐம்பெரும் பூதங்களிலொன்று. அகல் இருவிசும்பு - ஆகாயம் என்ற :பெரும்பாணுற்றுப்படைக்கு நச்சினர்க்கினியர் ஏனைய நாற்பெரும் பூதங்களும் தன்னுள் அடங்க விரிவுறுதலின் அகல் விசும்பு என்ற தென்னுங் கருத் துரைத்ததும் அறிதற்குரியது.

(1) ஒரு குடத்தைக் கவிழ்த்தவழி அதனுள் அடங்கிய ஆகாசம் கடாகாசம். கடம் - குடம்.

(2) ஒரு வீட்டினுள்ள வெளி மடாகாசம்.

(3) வெளியிடங்களிற் பரவியுள்ள பெருவெளி மகா ஆகாசம்.

ஏகான்ம வாதிகள் குடம் உடைந்தவழி அதனுள் இருந்த வெளி பெருவெளியில் இரண்டறக் கலப்பதுபோல, உடம்பு

இறந்தவழி அதனுள்ளிருந்த உயிர் (ஜீவான்மா) இறைவனோடு (பரமான்மா) இரண்டறக் கலக்குமென்பர்.

உவமத்தொகை :

உவமானத்துக்கும் உவமேயத்துக்கும் இடையில் உவம உருபு தொக்கு வருவது.

| உவமானம் | உவமேயம் |
|---|---|
| குட ஆகாயம் | (மகா) காயத்துடன் கலப்பது, |
| குட ஆகாயம் போல | மகா ஆகாயத்தோடு கலப்பது. |

2. உம்மைத்தொகை :-

வேறாயிருக்கும்போது குடாகாயமும் ஒன்றாய்க் கலக்கும் போது மகாகாசமும் போல்வது என்ற உரையில் உம்மைத் தொகையாக்கி விரிப்பர் என்றவாறு.

## அதிகரணம் 4.

" என்ற என்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தாற்றொக் கது புகழ் புரிந்தில் (குற - 59) என்புழிப்போல " — என்றார்.

இதற்கு விளக்கம் :-

என்ற என்பது பெயரெச்சம்.

அதன் (இறுதி) அகரம் ( ற் + )அ என்பது.

அது தொக்கால், ன்ற என நிற்கும்.

என்ற + அளவை = என்றளவை.

தொகாவிடின் என்ற + அளவை = என்ற வளவை என உடம்படு மெய்பெற்று நிற்கும்.

திருக்குறளில் புகழ் புரிந்த + இல் என்பது புரிந்த் + இல் — எனப் பெயரெச்சத்து அகரம் தொகுத்தல் விகாரம் பெற்ற மைக்கு எடுத்துக்காட்டு.

" ஒன்றன்று உளனன்று என்புழி ஒன்று உளனென்னுந் தருமி வாசகங்கள் ஆகுபெயரால் அத்தருமங்களின் மேனின்றன

வாகலான் உளனென்பதும் அஃறிணை யொருமையோடு முடிந்தது" — என்றார்.

**இதற்கு விளக்கம் :-**

(1) ஒன்று அன்று உளது - எனல் வேண்டும். அங்ஙன மின்றி உளன் என்பது வழு. வழுவாகாமைக்குக் காரணங் கூறுகிறார்.

ஒன்று - ஒன்றுந் தன்மை; உளன் - உளனுந்தன்மை; என்ற பொருள் தந்து நின்றன.

**உ. தருமி, தருமம் என்பதன் விளக்கம் :-**

இங்குத் தருமம் என்பது — தன்மை. இயல்பு என்ற பொருள் மேல் நின்றன.

உதாரணம் - இது வியாபார தர்மம், இது இல்லற தருமம், இது ஆரிய தர்மம்; இது மாணவர் தர்மம் என்பன காண்க.

ஒன்றுந் தன்மை - தர்மம். ஒன்றும் தன்மையுடையது — தருமி ( = ஒன்று ) பண்பு — (பண்பையுடையது) பண்பி என்பது போற் கொள்க.

தர்மியைத் தர்மம் என்றது தானியாகு பெயர். பூனை பாலை யுருட்டியது என்புழி பாற்பாத்திரத்தை யுணர்த்தினாற் போல.

(தொடரும்)

---


## குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,

" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

# மணிமேகலை

[ இலக்கிய நாடகம் ]

“செவ்வேள்”

( மலர் 22, இதழ் 9, பக்கம் 476 இன் தொடர்ச்சி )

காட்சி 6.

[ பூம்புகார் வீதி ]

[ குமரனும், வச்சிரவேலுவும், வசந்தமாலையும் ]

குமரன் : என்னப்பா ! வச்சிரவேலுவா ? வாப்பா, வா. இந்திர விழாவுக்குப் பிறகு கண்ணிலேயே காணுமே ... ...

வச்சிர : என்னப்பா, குமரஞ அது ! என்னப்பா அப்படி சொல்லிவிட்டே ... ... இந்திர விழாவுக்குக் கூட நான் இங் கில்லேயேப்பா !

கும : தவருல்ல சொல்லிட்டேன் போலிருக்கு ! அட, என் னப்பா வச்சிரம் ! தப்பா இருந்தா அடிச்சு’ல்ல பேச ஆரம்பிச் சுட்டே இப்போ ?

வச் : தம்பி ! உன் குறும்பெல்லாம் நம்மகிட்டே வைச்சுகா தேப்பா ... ... தப்பு அடிக்கிறது உங்க தொழிலு ! ஆமா ... நாமுகத்திலே வச்சுக்க !

கும : இந்தாப்பா வச்சிரம் ! நாமுகம், கழுதை முகம் - அப்படி இப்படின்னு திட்டறவேலே நம்மகிட்டே வச்சுக்காதே... ஆமாம் !

வச் : டே ! வச்சுகிட்டா என்னுடா பண்ணுவே ...

கும : நீ என்னடா பண்ணுவே ! உங்க மாமாவோடே மச்சுனரு சோழ அரண்மனையிலே சிப்பாய்க்கு உதவியாயிருந்தா

என்னவேணு'ன்னலும் செஞ்சிடலாமின்னு நினைக்கிறியா ... ... அது இவருகிட்ட நடக்காது தம்பி !

வச் : டேய் ! உங்க சித்தப்பாவோடே தம்பி பொண்ணு பெத்த புள்ளையோடு மூணுவது பெண்குழந்தை அரமனைத் தாதியா இருந்தா ஆருக்கென்னடா ? நாக்கை அடக்கியே பேசு !

கும : யாகாவாராயினும் நாகாக்க !

வச் : அதிகப்பிரசங்கி ! மூஞ்சியைப்பாரு !

கும : ஏண்டா ! மூஞ்சிக்கென்னடா குறைச்சல் ! நம்ம சதுக்கப்பூதம் மாதிரி 'இம்'ம்ன்னு !

[ வசந்தமாலை வருதல் ; அவள்மேல் பின்னேக்கிச் சென்ற வச்சிரவேலு மோதி விழுதல் ]

வசந் : யாருடாது, வீதியிலே இப்புடித்தான் நடக்கிறதோ?

வச்சி : (எழுந்துகொண்டே) மன்னிச்சிக்கே'ம்மா ! இந்த மடையனலேதான் இந்தக் கேடு !

கும : டேய் ! ஒரு பொம்மனுட்டிக்கு முன்னலே, மடையன்'னு சொன்னே ! உடைச்சுடுவேன் உடைச்சு பல்லை !

வச் : சும்மா, அளக்காதேடா அடிமடையா !

கும : டேய், என்ன நினைச்சே ! (ஓங்கமுயலும் போது)

வச : அடேடே ! இருங்கய்யா ! ஏன் இப்படி ஒருத்தருக் கொருத்தர் சண்டை போட்டுக்கிறிங்க !

வச் : ஏனு ?

கும : ஏனு ?

வச : ஆமாம் !

வச் : ஏண்டா சண்டை போட்டுக்கிறேம் ?

கும : அதுதானப்பா, எனக்கும் புரியல்லை !

வச : (கலகலவெனச் சிரித்து) நல்ல விநோதமான பேர் வழிகள் ! நாடகத்தில் நகைச்சுவைக்குச் சரியான ஆட்கள் !

[ போக முற்படும்போது ]

வச் : நீ... வசந்த... மாலைதானே !

வச : அடே ! என்பெயர் உமக்கெப்படித் தெரிந்தது ?

கும : அதுமட்டுமில்லை ! நீ சித்திராபதி வீட்டிலே பணிப் பெண்ணு இருக்கேங்கிறதும் தெரியும் !

வச் : அதுமட்டுமில்லை ! சித்திராபதியோட உயிர்த் தோழிங்கிறதும் தெரியும் ?

வசந் : அப்படியா ? புத்திசாலிகளாகக்கூட இருக்கிறீர் களே ?

கும : அதுமட்டுமில்லை ! நீ இப்போ அங்கேதான் போறேங்கிறது கூடத் தெரியும் !

வச் : அதுமட்டுமில்லை ! இந்த வழியாகத்தான் வருவேங் கிறது கூடத் தெரியும் !

வசந் : அதுமட்டுமில்லை ! இப்போது நான் அவசரமாகப் போகவேண்டும் என்பதுகூட உங்களுக்குத் தெரியும் ... ... இல்லையா ?

[ விரைந்து போகிருள் ]

வச்சி : அதுமட்டுமில்லை ! நம்ம சண்டை ஓய்ஞ்சுபோச்சுங் கிறதும் தெரியும் !

கும : அதுமட்டுமில்லை ! நம்ம சினேகிதங்கங்கிறதும் தெரியும் !

[ வயது முதிர்ந்த ஒரு கணிகை வருதல் ]

கும : பாட்டி ! எங்கே புறப்பட்டே இப்படி ?

கிழவி : ஏண்டா கண்ணு ! என்னைப் பார்த்தா உனக்குப் பாட்டியாகவா தெரியுது !

வச் : இல்லே பதினறுவயசு குமரியாகத் தெரியுது !

கிழ : எனக்கு என்ன வயசு இருக்கும்'னு நெனக்கிறே ?

கும : சுடுகாட்டுக்கு போற வயசு !

வச் , அதுமட்டுமில்லே ! பாடையிலே ஏறிப்பட்டணம் போற வயசு !

கும : சுடுகாட்டுக்குப் போறவயசு !

கிழ : எனக்கு இப்போ அறுபத்தைஞ்சு முடிஞ்சு பத்து மாதம் தானே ஆச்சு !

கும : அப்படியா, என்ன இளமை ! என்ன இளமை !

வச் : அதுமட்டுமில்லே ! என்ன குளுமை ! என்ன குளுமை!

கிழ : நான் யாரு தெரியுதாடா கண்ணு! சித்திராபதியோட சின்னம்மாவுக்குப் பெரிய பாட்டி !

கும : தெரியுதே......!

வச் : அதுமட்டுமில்லே, புரியுதே !

கிழ : அந்தக்காலத்திலே - கரிகால சோழ மகாராசா காலத்திலே என் கண்வீச்சுக்கு எத்தனைபேர் ! காலடியிலே எத்தனை பேர் ! அப்படி ஒரு அசைப்பு அசைச்சேன்னு ... ...

கும : உதிருமே ...

வச் : எது ?

கும : பல்லு !

கிழ : இம் ... அந்தக்காலமெல்லாம் மலையேறிப் போச்சு ! சித்திராபதியோட தாதியா கெடக்கக்கூட நிலைமை வந்திருக்கு !

வச் : அதுமட்டுமில்லே, வேற நிலைமையும் சீக்கிரமே வந்துடும், கவலைப்படாதே பாட்டியம்மா !

கிழ : மாதவியைப்போய் கூட்டிவா'ன்னு இவ அனுப்புறதும் அவள் என்மேலே சீறி விழுறதும்... ... எனக்கு இதுவும் வேணும்.

கும : அதுவுமில்லே, இன்னமும் வேணும்.

[ போகிறாள் ; இருவரும் சிரித்தல் ]

( தொடரும் )

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 22, இதழ் 9, பக்கம் 484 இன் தொடர்ச்சி )

स्वर्ण यज्ञोपवीतं च पञ्चनिष्कं च कारयेत् ।
सप्तनिष्क सुवर्णेन रक्षासूत्रं तु कारयेत् ॥ 224

कौतुकं शातकुम्भं च राजतंवाऽथ तन्तुना ।
लिङ्गनाहसमं सूत्रं पीठे बेरे च तत्तथा ॥ 225

ஐந்துவராகனெடை பவுனல் செய்யப்பட்ட பூணலை சிவ கும்பத்திற்குச் சாத்தவேண்டும். ஏழுவராகனெடை சுவர்ணத்தி னல் ரக்ஷாசூத்திரம் வேண்டும், இலிங்கத்தின் சுற்றளவுக்குச் சமமாக இருக்கவேண்டும், அந்த கௌதுகமானது தங்கத்தி னலோ, வெள்ளியினலோ அல்லது நூலினலோ இருக்கலாம், இவ்வாறே பீடத்திற்கும், பிம்பத்திற்கும் ரக்ஷாசூத்ரம் கட்ட வேண்டும்.

स्वल्पाधिक प्रमाणाद्यं नागराज फणान्वितम् ।
तत्पुच्छ संयुतं सूत्रं पट्टाकार समंतु वा ॥ 226

அகலத்தில் குறைவுள்ளதாகவும் நீளத்தில் அதிகமுள்ள தாகவும் பாம்பின் படம் போன்று ஒருபுறமும், பாம்பின் வால் போன்று மற்றெருபுறமும் அமைக்கப்பட்டதாக இருக்கவேண் டும், அவ்வாறு உள்ள ரக்ஷா சூத்ரத்தை, இலிங்கம் பீடம் பிம்பம் முதலானவைகளுக்குக் கட்டவேண்டும், அல்லது பட்டுநூலி னலாவது ரக்ஷாபந்தனம் செய்யவேண்டும். இவ்வாறு ரக்ஷாபந் தனம் செய்யவேண்டிய சூத்திரத்தைத் தயார் செய்து வைத்துக் கொள்ளவேண்டும்.

षट्त्रिंशाद्दर्भ संख्यैश्च निर्मितं कूर्चमुत्तमम् ।
अग्रं वेदाङ्गुळं प्रोक्तं नाळमष्टा दशाङ्गुलम् ॥ 227

स्निग्धं समाग्रं श्यामं च शिव कुम्भे विनिक्षिपेत् ।

முப்பத்தாறு தர்ப்பத்தினால் முடியப்பட்ட அந்தக் கூர்ச்சத்தை சிவகும்பத்தின் நடுவில் போடவேண்டும், அந்தக் கூர்ச்சத்தின் நுனியானது நான்கு அங்குலம் நீளமுள்ளதாயும் அந்த கூர்ச்சத்தின் வால் எட்டு அங்குல நீளமுள்ளதாயும், மனோகரமாயும், சமமான நுனியுடையதாயும், பச்சையாயுமிருக்க வேண்டும்.

चतुर्दशांगुलं नाळं पञ्चविंशति दर्भकैः ॥ 228

पञ्चादशदळैर्दर्भै रग्रग्रन्धि त्रयांगुलम् ।
त्रयोदशाङ्गुलं नाळं प्रमाण सदृशायतम् ॥ 229

विद्येशकलशानांतु कूर्चंक्षिप्त्वा यथाक्रमम् ।

பதினான்கு அங்குல நீளமுள்ளதான இருபத்தைந்து தர்ப்பங்களாலும் பதினைந்து தர்ப்பங்களாலும் மூன்று அங்குலமுள்ள முடிச்சுள்ளதாயும், பதிமூன்று அங்குல நீளமுள்ளதாயும் வித்யேச்வர கலசங்களுக்குக் கூர்ச்சம் செய்யவேண்டும்.

उर्ध्वाग्रं स्यात्प्रतिष्ठाया मधोग्रं शान्तिकं भवेत् ॥ 230

कुर्यात्कूर्चं क्रमेणैवं ग्रन्थिस्स्यान्मुखमत्रहि ।

கூர்ச்சத்தை மேல் நுனியாக பிரதிஷ்டையில் போடவேண்டும், கீழ்நோக்கிய நுனியாக ஸம்புரோக்ஷணத்தில் போட வேண்டும், இவ்வாறு முறையாக அந்தக் கூர்ச்சத்தைப் போட வேண்டும். அவ்வாறு போடப்படும் அந்தக் கூர்ச்சத்தின் முடிச்சு முகபாகமாகும்.

कुंभेषु चूतपत्राणि पञ्चविंशतिसंख्यया ।
वर्धन्यां चूतपत्राणि पञ्चादशमिति स्मृतम् ॥ 231

சிவகும்பத்திற்குப் போடப்படும், மாவிலையின் தளம் இருபத்தைந்தாக இருக்கவேண்டும் இதுபோல் வர்த்தனி கும்பத்திற்குப் போடப்படுவது பதினைந்து தளமுள்ளதாக இருக்கவேண்டும். மற்றும் யௌவன தளங்களாயும், வ்ரணம் சுஷ்க்கம் இல்லாததாயும் இருக்கவேண்டும் என்றும் மற்றொரு விடத்தில் கூறப்படுகிறது.

कलशेष्वष्टपत्राणि षोडशांगुलं दीर्घकम् ।
अथवा द्वादशांगुल्यं साङ्गं चैव प्रकीर्त्तितम् ॥ 232

மற்றய வித்யேசர் முதலிய கலசங்களுக்கு எட்டு தளம் உடையதான மாங்கொத்தைப் போடவேண்டும், அவ்வாறு போடப்படும் மாவிலைகள், பதினாறு அங்குலம் நீளமுள்ள தாகவோ அல்லது பன்னிரண்டு அங்குல நீளமுள்ளதாகவோ போடப்படுவது சாங்கமாகக் கூறப்படுகிறது. (அதாவது, ' चूतपत्र जटान्वितं '' மாவிலையாகிய ஜடையை உடையது, வித்யா தேஹமாகக் கல்பிக்கப்படும். கடத்திற்கு மாவிலையே கேசமாக ஆகிறது என்பதாலும் உத்தமாங்கம் சாங்கமானதாலும், யக்ஷிணையாக இதுவும் சாங்கம் என்று கூறப்படுகிறது.)

कुम्भकं समं वृत्तं शरावाकृति वत्कृतम् ।
तन्मध्येरन्ध्र संयुक्तं विन्यसेत्सपिधानकम् ॥ 233

ஒவ்வொரு கலசத்திற்கும் கழுத்துக்குச் சமமாக உள்ளதாயும் வட்டமாயும் நடுவில் துவாரங்களுள்ளதாயும் மடக்குப்போன்று சிறிது குழிவாக உள்ளதாயுமிருக்கிற மூடி ஒன்றை அமைக்க வேண்டும். (இதை ஜாக்கிரதையாக மாவிலைகளை வைத்து அதன்மேல் இந்த மூடியை மூடி அதன்மேல் தேங்காயை வைக்க வேண்டும். இம்முறை பழக்கத்தினின்றும் நீங்கிவிட்டது. இது பிரும்மரந்திரம் போன்றது)

नालिकेरंतु कुम्भानामुत्तमांगं तु कथ्यते ।
डाडिमी मध्यमं प्रोक्तं चूतरं याधमं भवेत् ॥ 234

देवाज्ञा च तथा प्रोक्ते यथा लाभं प्रकल्पयेत् ।

கும்பங்களில் வைக்கப்படும் தேங்காயானது தலையாக ஆகும். தேங்காய் வைப்பது உத்தமபக்ஷம். தேங்காய் கிடைக்கவில்லை யானால் மாதுளம்பழத்தை வைக்கலாம், இது மத்தியமமாகும். மாதுளம்பழமும் கிடைக்காவிடில் மாம்பழம் அல்லது வாழைப் பழம் வைக்கலாம், இது அதமமாகும். இது இறைவனுடைய ஆணை. கிடைப்பவைகளை விட்டு லோபத்தினால் அதமபக்ஷத் தில் போகாமல் கிடைத்த அளவு சரியாகச் செய்யவேண்டும்.

नालिकेफलं प्रोक्तं शिरः कुम्भस्य चोच्यते ।
तन्मुखं वक्त्रमेवन्तु मुखेपूजां प्रकल्पयेत् ॥ 235

தேங்காய் கும்பத்திற்குத் தலை என்பதுபோல் அந்தத் தேங்காயின் முகபாகமே கும்பத்திற்கு முகமாகும், அதை அறிந்து பூஜைசெய்யும் பக்கத்தில் முகத்தைவைத்து அந்த முகபாகத்தில் பூஜைசெய்யவேண்டும்.

एकत्रिं शद्दलैः कूर्चं कृत्वा कुम्भेन्यसेत्बुधः ।
एकविंशति दर्भैश्च वर्धन्यां विन्यसेत्बुधः ॥ 236

एकादश दलैरन्यत्ग्रन्थि रेकांगुलं भवेत् ।
चतुरंगुलं मानं हि ग्रन्थ्यग्रं चाभिशस्यते ॥ 237

आग्रंथि मूलमानं हि मूर्धाद्यापादमिष्यते ।
इत्येवं लक्षणं ज्ञेयं लंबकूर्चस्य धीमता ॥ 238

கும்பத்திற்கு கூர்ச்சம் இன்றியமையாதது. அது முப்பத்தொரு தர்ப்பத்தினுல் முடியப்பட்ட கூர்ச்சத்தை சிவகும்பத்திற்கும் இருபத்தொரு தர்ப்பத்தினுல் முடியப்பட்ட கூர்ச்சத்தை வர்த்தனீ கும்பத்திற்கும், பதினெரு தர்ப்பத்தினுல் முடியப்பட்ட கூர்ச்சத்தை மற்ற கும்பங்களுக்கும் இடவேண்டும், அதன் முடிச்சு ஒரு அங்குலமும் முடிச்சினுடைய நுனி நான்கு அங்குல நீளமும் இருக்கவேண்டும். ஆகவே கும்பத்தின் சிரசுமுதல் பாதம்வரையில் நீளமுள்ளதாக அந்தக் கூர்ச்சம் இருக்கவேண்டும். இவ்வாறு லம்பகூர்ச்சத்தின் இலக்கணம் கூறப்படுகிறது. இதன்பிறகு வஸ்திரத்தின் இலக்கணம் கூறப்படுகிறது அதாவது,

उत्तमं रविहस्तं स्यान्मध्यमं दशहस्तकम् ।
अधमं चाष्टहस्तं स्यात्पञ्चताल सुविस्तृतम् ॥ 239

वस्त्रद्वयेन संवेष्ट्य तत्समं च दुकूलकम् ।
पीतंवा सुदृढं सूक्ष्मं शिवकुम्भेतु योजयेत् ॥ 240

பன்னிரண்டுமுழ நீளமுள்ள வஸ்திரம் உத்தம பக்ஷமாகும் பத்துமுழ நீளமுள்ள வஸ்திரம் நடுத்தரமாகும். எட்டுமுழ நீளமுள்ள வஸ்திரம் அதமபக்ஷமாகும். இதன் அகலம் இரண்டரை முழமுள்ளதாக விருக்கவேண்டும். இவ்வாறு இரண்டு வஸ்திரத்தைக் கும்பத்திற்குக் கட்டவேண்டும். இதற்குச் சமமாக பட்டையும் கட்டவேண்டும். அந்த பட்டின் வர்ணமானது மஞ்சள் பட்டாகவும் கெட்டியாகவும், மிகவும் மெல்லியதாகவும் இருக்கும் பட்டை சிவகும்பத்திற்குக் கட்டவேண்டும். [தொடரும்]

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம்
மகாகும்பாபிஷேக விழாவில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பன்னிருதிருமுறை மாநாட்டைத் தொடங்கி வைத்தல்.

திருபுவனம் மகாகும்பாபிஷேக விழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

சென்னை மாநில முதலமைச்சர் " நல்லறங்காவலர் "
கனம் திரு. M. பக்தவத்சலம் B. A., B. L. அவர்களுக்குப்
பொன்னுடை போர்த்தியருளல்

திருபுவனம் மகாகும்பாபிஷேக விழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு, வித்துவான்.
ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கும்
அறநிலையத்துறை ஆணையர்,
திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. ஏ. பி. எல். அவர்கட்கும்
பொன்னுடை போர்த்தியருளல்.

திருபுவனம் மகாகும்பாபிஷேக விழாவில் நிகழ்ந்த
கலைக்கூடத் திறப்புவிழாவில்



ஸ்ரீ ல ஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
சென்னை மாநில அறநிலையத்துறை ஆணையர்
திரு. எம், எஸ். சாரங்கபாணி முதலியார் பி.ஏ-பி.எல். அவர்களுக்கும்,
துணை ஆணையர் திரு. கே, சோமசுந்தர தேசிகர் அவர்கட்கும்
பொன்னுடை போர்த்தியருளல்.

# அருள்வாக்கு - II

திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ.,

உலகில் வாழும் மனிதர்க்ள் ஒவ்வொருவரும் ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டே வாழவேண்டும் என்பது பெரியோர்கள் அறவுரை. குறிக்கோள் இல்லாத வாழ்க்கை விலங்கு வாழ்க்கைக்கு ஒப்பாகும். பிறந்து வாழ்ந்து இனப்பெருக்கம் செய்து இறந்துபோதல் மட்டுமே மனிதனுடைய வாழ்க்கை என்ருல் விலங்கு வாழ்க்கைக்கும், மனித வாழ்க்கைக்கும், எவ்விதமான வேறுபாடும் இல்லையென்பது நன்கு விளங்கும். “அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்று நம்மவர்கள் கூறுகின்ற பொழுது, அதன் அடிப்படை ஏதாவது ஒன்று இருக்கவேண்டும் அன்ருே? நான்கு கால்களுடன் வாழும் விலங்குகளைக் காட்டிலும் இரண்டு கால்களுடன் வாழும் மனிதன் எவ்வகையில் உயர்ந்தவனுக முடியும்? ஐந்து பொறிகள் மனிதனுக்குக் கிடைத்து இருக்கின்றன என்று யாரேனும் கூறுவார்களேயானுல் மனிதனிடம் உள்ள இப்பொறிகளைக் காட்டிலும் மிக மிகக் கூர்மையான சிறப்புடைய பொறிகளை விலங்குகளும் பெற்று இருக்கின்றன என்று கூறலாம். மனிதனுடைய கண்ணுகிய பொறியைக் காட்டிலும் கழுகு, பூனை, முதலிய உயிர்கள் கூர்மையான பார்வையைப் பெற்றுள்ளன. மனிதனுடைய செவி சிறந்தது என்ருல் மனிதன் கேளாத ஒலியையும் கேட்கக்கூடிய நாய்கள் உயர்ந்தவையாய் விடும். மணத்தை நுகரக்கூடிய பொறியாகிய மூக்கு மனிதனுக்கு உண்டு என்ருல், மோப்பம் பிடித்தலில் சிறந்த நாய் மனிதனைவிடச் சிறந்ததாகிவிடும். உற்று அறியும் பொறியாகிய உடம்பை உடையவைகளில் மனிதன் சிறந்தவன் என்ருல் அவனைவிட நுண்மையான ஊற்றுணர்ச்சி படைத்த எலி, முதலிய பிராணிகளும், தொட்டால் சுருங்கி போன்ற செடிகளும் உயர்ந்தவை என்றே கருதப்பெறும். என ..., மனிதனைவிட நுண்ணிய பொறியைப் பெற்ற இவ்விலங்குகளில் இருந்து பகுத்தறிவைப்பெற்ற மனிதன் உயர்ந்தவன் என்று பெருமை பாராட்டக்கூடுமேயானுல், அதற்கு ஒரே ஒரு காரணம், அவன் குறிக்கோளோடு கூடிய வாழ்க்கையைப் பெற்றுள்ளான் என்பதேயாகும்.

இதைக் கருத்தில் கொண்டு தான் போலும், திருநாவுக்கரசர் பெருமான் "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்று பாடுகிருர். ஆகவே மனிதனுக்குக் குறிக்கோள் வேண்டும் என்ருல், அது எத்தகைய குறிக்கோளாக இருத்தல் வேண்டும் என்ற வினு அடுத்துத் தோன்றும். கேவலம் அற்ப முயற்சியில் பெற்று விடக்கூடிய ஒன்றை வாழ்க்கையில் குறிக்கோளாகக்கொள்வதைக் காட்டிலும் குறிக்கோள் இல்லாமல் இருப்பதே மேல் என்று நம்மவர்கள் கருதினர்கள். புறநானூற்றுக்காரர் அத்தகைய அற்பத்தனமான குறிக்கோள் உடையவர்களே, அற்பக் குறிக்கோளே அடைவதற்காக முயற்சிசெய்பவர்களே, 'எலிகள்' என்று கூறி எள்ளி நகையாடுகிருர். "எலி முயன்று அனையர்" என்று அவர் கூறும்பொழுது அற்பத்தனமான குறிக்கோள் எத்தகையது என்று அறிகிருேம்.

இதன் எதிராக, அடையமுடியாவிடினும் உயர்ந்ததொரு குறிக்கோளைப் பெற்று வாழ்தல் மானிடப் பிறவியின் சிறந்த நோக்கங்களுள் ஒன்று என்று பெரியோர் கூறினர். அடைய முடியாத குறிக்கோளே வைத்துக்கொண்டு இருப்பதால் என்ன பயன் என்று நம்மில் சிலர் நினைக்கலாம். என்ருலும், அப்பெரிய குறிக்கோளே அடையும் முயற்சியில் தோற்றுப்போவதுகூட மேல் என்றே வள்ளுவர் கூறுகிருர். காட்டில் ஓடுகின்ற முயலைக் கொன்ற அம்பைக் கையில் வைத்து இருப்பதைக் காட்டிலும், யானையின்மேல் எய்து, அது குறி தவறிவிட்டாலும் அந்த அம்பை வைத்து இருப்பது உயர்வானது என்ற பொருளில் "கான முயல் எய்த அம்பெனில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது" என்றும் "உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் மற்றது, தள்ளினும், தள்ளாமை நீர்த்து" என்றும் கூறிச் செல்கிருர். பொய் புரட்டு செய்தாகிலும் ஒரு லட்ச ரூபாயை இத்தனை காலத்திற்குள் சேகரித்து விடுவேன் என்று ஒரு குறிக்கோளே வைத்துக்கொண்டு அதனைச் சம்பாதித்துவிடுவதைக் காட்டிலும், நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றுத்தருகிறேன் என்று, வயது முதிர்ந்த ஒரு கிழவர் உறுதி எடுத்துக்கொள்வது மிக மிக உயர்ந்ததாகும். அத்தகைய குறிக்கோளே அவர் தம்முடைய வாழ்நாளில் பெற்றுவிட முடியுமா, பெறமுடியாவிடின் அத்தகைய குறிக்கோளைப் பெற்றிருப்பதால் யாது பயன் என்று கேட்கலாம். ஆனல் அடைய முடிவது முடியாதது என்பதைக் கொண்டு ஒரு குறிக்கோளே உயர்ந்தது, தாழ்ந்தது என்று நாம் கூறுவதில்லை. நாட்டில் ஒற்றுமை நிலை குலைந்து நின்ற காலத்தில் ஒற்றுமையை நிலைநிறுத்துவேன் என்ற

முயற்சியில் ஈடுபட்டு அதில் உயிரை விடுவது கூட சிறந்ததே யாகும். இத்தகைய மாபெரும் குறிக்கோளை மனத்தில் வைத்துக் கொண்டு அதற்கெனத் தம் வாழ்நாளைச் செலவழிக்கின்றவர்கள் பெரியவர்களே. குறள் "செயற்கரிய செய்வர் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலாதார்" என்று கூறுகிறது..

## ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள்

திருமுறை இன்னிசைவாணர், வேலூர். க. சொக்கலிங்கம்.

இராகம் - காப்பி ] [ தாளம் - ஜம்பை

பல்லவி

தருமைத் திருநாவுக் கரசன் திருத்தாளே
தஞ்சமென் றடைவாயே நெஞ்சமே நீயே (தரு)

அனுபல்லவி

மறுமைக்கும் இம்மைக்கும் வாழ்வுதர வல்லான்
மனக்கவலை நீக்குவதில் தனக்குவமை யில்லான் (தரு)

சரணம்

திரை நீக்கி அருள்தந்த செல்வமுத்துக் குமாரனைச்
சிந்தை இருத்தியே சேவித்திடும் பெருமான்
பறவையினங் களும்தம் பகைநீங்கி வாழக்கண்
பார்வையால் தீக்கையே பரிந்தருள் செய்பவன் (தரு)

வாதுசெயும் வைணவர் வாய்பேசா வகையாலே
வழிபட அவர்தமக்கே வந்தவெந் நீக்கி
ஆதிசிவன் புகழ்மிகுந்த அவனியில் நிலைநாட்டி
அன்பாகப் படிக்காசுப் புலவரையே அடிமைகொளும் (தரு)

# சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,

**வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.**

( மலர் 22, இதழ் 10, பக்கம் 532இன் தொடர்ச்சி )

## பயன்

மாணுக்கன் : சித்தாந்தத்துட் கூறப்படும் சாதனங்களை அருளினீர்கள். இனி, அச்சாதனத்தால் அடையும் பயன்களை அருளிச்செய்தல் வேண்டும்.

ஆசிரியர் : உயிர்கள் அடையவேண்டிய முடிந்த பயன் வீடு பேறே. அவ் வீடுபேற்றிற்கு நேரே சாதனமாய் நிற்பது, ஞானம். அந்த ஞானத்திற்குச் சாதனமாய் உள்ளவை சரியை கிரியா யோகங்கள். சாதனங்களால் அடையப்படும் பயன், 'சாத்தியம்' எனப்படும். எனவே, வீடுபேறு சாத்தியமும், ஞானம் சாதனமும், சரியை கிரியா யோகங்கள் சாதனத்திற்குச் சாதனமும் ஆம் என்பது விளங்குகின்றது அன்றோ!

## சரியை முதலியவற்றின் பயன்

மாணுக்கன் : ஆம்; நன்கு விளங்குகின்றது. அங்ஙன மாயின், சரியை முதலிய மூன்றிற்கும் பயன் ஞானம் ஒன்று தானே ?

ஆசிரியர் : ஆம்; ஞானம் ஒன்றுதான் சரியை முதலிய மூன்றிற்கும் பயன்; ஆயினும், அது சரியை முதலிய மூன்றிற் கும் முடிவான பயன்; இடைநிலைப் பயனுக, 'சாலோகம், சாமீபம், சாரூபம்' என்பவற்றையும் அவை முறையே தரும்.

மாணுக்கன் : சாலோகமாவது யாது ?

ஆசிரியர் : [சாலோகமாவது, சிவபெருமானுடைய உல கத்தை (சிவலோகத்தை) அடைந்து, ஓர் அரண்மனையில் பணி செய்பவர்கள் அதன்கண் எங்கும் தடையின்றிச் செல்லும் உரிமை

யுடையராய் இருத்தல்போல, அச் சிவலோகம் எங்கும் தடையின்றிச் செல்லும் உரிமை பெற்று, அங்குள்ள இன்பங்களை நுகர்தலாகும்.

மாணுக்கன் : சாமீபமாவது யாது ?

ஆசிரியர் : சாமீபமாவது, சிவலோகத்தில் எங்கும் தடையின்றிச் செல்லுதல் மட்டுமன்றி, அரசனிடம் தடையின்றி அணுகி, வேண்டுவனவற்றைப் பெறும் உரிமையுடைய அவன் புதல்வர் போல, இறைவனை அணுகி வேண்டிய உயர்ந்த இன்பங்களைப் பெற்று வாழ்தல்.

மாணுக்கன் : சாரூபமாவது யாது ?

ஆசிரியர் : சாரூபமாவது, அரசனை அணுகி வேண்டியவற்றைப் பெறுவதுமட்டுமன்றி, அரசனுக்குத் தோழராய் உள்ளவர், அவனைப்போலவே ஆடை அணிகலங்களை அணிந்து அவனோடு ஒத்தநிலையில் இருந்து சிறந்த இன்பங்களைப் பெறுதல் போல, இறைவனுக்குரிய வடிவம், ஆடை அணிகலன் முதலியவற்றைப் பெற்றுச் சிறந்த இன்பத்தை நுகர்தல்.

சாலோகம் முதலிய மூன்று நிலைகளிலும், அவற்றை அடைந்தவர் முறையே தொண்டர்போலவும், மைந்தர்போலவும், தோழர் போலவும் இருத்தல்பற்றியே, அவைகளை அடைவிக்கும் சரியை முதலிய மூன்றும் முறையே தொண்டர் நெறி (தாசமார்க்கம்), மகன்மை நெறி (சற்புத்திர மார்க்கம்), தோழமை நெறி (சக மார்க்கம்) எனப்படுகின்றன.

அமிர்தத்தை உண்பவர் அதனால் அடையும் முடிந்த பயன், 'நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு' என்பவை இல்லாது நெடுங்காலம் இருத்தலேயாகும். ஆயினும், அது பசியையும் தணித்தல்போல, சரியை முதலிய மூன்றினாலும் அடையும் முடிந்த பயன், ஞானமேயாகும். ஆயினும், சாலோகம் முதலியவை அவற்றின் இடைநிலைப் பயன்களாகும்.

## ஞானத்தின் பயன்

மாணுக்கன் : 'சரியை முதலியவற்றின் பயன் ஞானம்' என்றும், 'ஞானத்தின் பயன் வீடுபேறு' என்றும், வீடுபேறே முடிந்த பயன் ; அதற்குமேற்பட்ட பயன் வேறொன்றும் இல்லை'

என்றும் அருளினீர்கள்; வீடு பேறே முடிந்த பயனாதல் எவ்வாறு ?

ஆசிரியர்: 'வீடு பேறு' என்பது, 'வீட்டைப் பெறுதல்' எனப் பொருள் தருதலேயன்றி, 'வீடும், பேறும்' எனவும் பொருள்தரும். 'வீடு' என்பது விடுதல்; 'பேறு' என்பது பெறுதல். எனவே, பற்றி இருந்த ஒன்றை வீடுதலும், அடையா திருந்த ஒன்றை அடைதலும் வீடு பேறாகும் என்பது விளங்கும்.

மாணாக்கன்: விடுதல் எதனை ? பெறுதல் எதனை ?

ஆசிரியர்: 'விடுதல் துன்பத்தை' எனவும், 'பெறுதல் இன்பத்தை' எனவும் பொதுவாகக் கூறலாம்; ஆனால், உண்மையில், விடவேண்டுவது துன்பத்திற்குக் காரணமான பாசத்தையும், அடையவேண்டுவது இன்பத்துக்குக் காரணமான சிவத்தையுமே யாகும். ஆகவே, 'வீடு பேறு' என்பது, பாசத்தை விட்டுப் பதியினை அடைதலாகும். "பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி" என்பது சிவஞான சித்தி. இதனால், 'பாச நீக்கமும், சிவப்பேறும்' என, ஞானத்தின் பயன் இரண்டு என்பது பெறப்படும்.

மாணாக்கன்: இவ்விருவகைப் பயனும் ஞானத்தால் எவ்வாறு உளவாகும் ?

ஆசிரியர்: 'ஆணவம், கன்மம், மாயை' எனப் பாசங்கள் மூன்று என்பது முன்பே சொல்லப்பட்டது. அவற்றுள் ஆணவம் இயற்கையிலே ஆன்மாவைப்பற்றி அதன் அறிவை மறைத்து அறியாமையே வடிவாய் இருக்கச் செய்யும். ஏனைய கன்மமும் மாயையும் அதற்கு மாற்றுப் பொருள்களாய் இறைவனால் சேர்க்கப்பட்டுப் பிறப்பிறப்பில் உழலச்செய்யும் முகத்தால் ஆணவத்தின் சத்தியைத் தேய்த்துவரும். ஆணவ சத்தி வலி குன்றி மெலிவடைந்த நிலையில் இறைவன், 'உலகப் பொருள்கள் யாவும் சிறியனவும் நிலையில்லனவும் ஆதலால், அவைகளைப் பெற அவாவும், அவாவே துன்பத்திற்குக் காரணம்; அவற்றை விடுத்து, அளவிலாப் பெருமையையும், என்றும் ஒரு பெற்றியில் நிற்றலும் உடைய நம்மை அடையின் இன்பம் உண்டாகும்' என்று அறிவிப்பான்; அங்ஙனம் அவன் அறிவித்தவாறு அறிதலே ஞானமாகலானும், 'துன்பம் தரும் பொருள் இது' என்றும், 'இன்பம் தரும் பொருள் இது' என்றும் அறிந்த

பின்னர், துன்பம்தரும் பொருளினின்று நீங்குதற்கும், இன்பம் தரும்பொருளை அடைதற்கும் தடை இன்மையால், இறைவன் அறிவித்தவாறே அறியும் ஞானத்தினல் பாச நீக்கமும் சிவப் பேறும் உளவாகும் என்று அறிவாயாக.

மாணுக்கன்: அங்ஙனமாயின், 'உலகப் பொருள்கள் துன்பம் தருவன' என்றும், 'இறைவனே இன்பப் பொருள்' என்றும் சொல்லக் கேட்ட உடனே, பாச நீக்கமும் சிவப்பேறும் உளவாகிவிடுமோ ?

ஆசிரியர்: ஆணவ சத்தி பெரிதும் மெலிவடைந்தவர்கட்கு, உலக இன்பத்தை விடுத்து இறைவன் இன்பத்தைப் பெறுவதில் மிக்க விரைவு உண்டாகும். அவர்கட்கு மேற்கூறியவற்றைக் கேட்ட உடனே உலகத்தை விட்டுச் சிவனை அடையும் நிலை உண்டாகும். ஆணவசத்தி சிறிது மெலிவடைந்தவர்கட்கு அம் முயற்சி சிறிது சிறிதாக வளர்ச்சியடையும். ஆகவே, அவர்கள் உலகத்தைச் சிறிது சிறிதாக விடுத்துச் சிவனையும் சிறிது சிறிதாக அடைந்து, முடிவில் முற்றிலும் உலகத்தை விடுத்துச் சிவ னிடத்தே அழுந்தி நிற்பார்கள். 'உலகம் துன்பம்; இறைவன் திருவடியே இன்பம் என்னும் உணர்ச்சி தோன்றுத நிலை' ஆணவம் மறைத்து நிற்கும் நிலை; அவ்வுணர்ச்சி தோன்றிய பின், உலகத்தை முற்றிலும் விடுத்துச் சிவனது திருவடி நிழலி லேயே அடங்கிநிற்கப் பெருத நிலை ஆணவத்தின் வாசனை தாக்கும் நிலை. ஆகவே, ஆணவத்தின் வாசனையும் பற்றறக் கழியுமாயின், உலகத்தை முற்றிலும் விடுத்துச் சிவனது திருவடி நிழலிலே அடங்கியிருக்கும் நிலை கிடைக்கும்.

மாணுக்கன்: 'உலகம் துன்பம்' என்பதும், 'இறைவன் திருவடியே இன்பம்' என்பதும் நூல்களாலேயே அறியக் கிடத்தலின், 'இதனை நமக்குப் பக்குவம் வந்த காலத்தில் இறை வனே வந்து அறிவிப்பான்; அவன் அறிவித்தவண்ணம் அறிதலே ஞானம்' என்று கூறவேண்டுவது என்னை ?

ஆசிரியர்: நூல்களால் மட்டும் அறிவது ஞானமாகாது; ஏனெனில், 'இறைவன் உண்டு' என்றும், 'அவனது திருவடி இன்பமே பேரின்பம்' என்றும் கூறும் உண்மை நூல்களைப் படிக்கும்பொழுது, அவ்வுணர்ச்சி தோன்றும்; பின்னர், அதற்கு எதிராக, 'இறைவன் இல்லை' என்றும், 'உலகமே மெய்' என்றும் கூறும் மயக்க நூல்கள் தம் கொள்கையைப் பலவகையில்

நிறுவுதலைப் படிக்கும்பொழுது முன் இருந்த உணர்ச்சி, காற்றின் முன் ஏற்றிய விளக்குப்போலத் தடுமாற்றம் அடைய, மயக்க நூல்களால் உண்டாகும் மயக்க உணர்வே தோன்றும். அதனால், நூல்களால் உண்டாகும் அறிவு, சூழ்நிலைகளுக்கு ஏற்ப உண்டாகும் ஏனைய உலக உணர்ச்சிகளில் ஒன்றாகுமல்லது, உண்மை ஞானமாகாது. ஆனால், இறைவன் வந்து உணர்த்த உணர்ந்த பின், அந்த ஞானம் பசுமரத்தாணிபோலப் பின் எவ்வாற்றாலும் சலித்தல் இல்லை. ஆதலின், அதுவே உண்மை ஞானமாகும். ஆகவே, உண்மை ஞானம் இறைவனால் அன்றி உண்டாதல் இல்லையாம். இறைவன் உணர்த்த உணர்ந்த பெரியோர்கள், பின் எவ்வாற்றானும் மயங்குதல் இல்லை என்பதை, "என் புந்திவட் டத்திடைப் புக்குநின் றானையும் பொய்என்பெனே" என்னும் திருநாவுக்கரசர் திருமொழியால் நன்குணரலாம்.

நூல்களால் உணர்ந்துவருங் காலத்தில் ஆணவத்தின் சத்தி மெலியாது வலுத்து நிற்றலின், அவ்வுணர்ச்சியை அது மாற்ற வல்லதாகின்றது; ஆணவத்தின் சத்தி பெரிதும் மெலிவடைந்த நிலையை நோக்கியிருந்து, அந்நிலை வந்த உடனே இறைவன் வெளிப்பட்டு நின்று தனது நோக்கு, பரிசம் முதலியவற்றால் ஆணவ சத்தியை முற்றக் கெடுத்து, உண்மையை உணர்த்துதலால், அதன்பின் அவ்வுணர்ச்சி மாறாது நிலை நிற்கின்றது என அறிக.

மாணாக்கன்: அங்ஙனமாயின், இறைவன் வந்து உணர்த்திய பின்னரும் ஆணவத்தின் வாசனை தாக்கும் என்பது என்னை?

ஆசிரியர்: ஆணவத்தின் வாசனை, ஞானத்தினைத் தடுமாறச் செய்யாது; மற்று, ஞானத்தின் வழி நிற்க ஒட்டாது அலைவை மாத்திரமே உண்டாக்கும். அப்பொழுது; ஞானியர் அந்நிலைக்கு வருந்தி, ஆணவத்தின் வழிப்படாது, ஞானத்தின் வழியே உலகப் பற்றையறுத்து இறைவன் திருவடியையே பற்றிக் கிடக்க முயலுதலை, அவர்கள் சொல்லாலும் செயலாலும் நன்குணரலாம்.

மாணாக்கன்: ஆணவத்தின் வாசனை தாக்கும்பொழுது சிவஞானியர் யாது செய்வர்?

ஆசிரியர்: ஆணவத்தின் வாசனை தாக்கும்பொழுது சிவஞானியர் திருவைந்தெழுத்தை விதிப்படி ஓதி உணருமாற்றால்,

உலகம் நிலையற்றது என்பதையும், அவ்வுலகத்திற்கும் தம் அறிவிற்கும் முதலாயுள்ளது இறைவனது திருவருளே என்பதையும் நினைவு கூர்ந்து, தம் முனைப்பைத் தவிர்த்து இறை நிறைவில் ஒன்றுபட்டு நிற்பர். அதனால், ஆணவமல வாசனையும் அதன் வழித்தோன்றும், பிராரத்த ஆகாமிய கன்மங்களும், அவற்றிற்குப் பற்றுக்கோடாகிய மாயா மலமும் பற்றறக் கழியும். அதுவே பாச நீக்கமாம். அணை முரிந்தவழி அதனால் தடுக்கப்பட்டு நின்ற நீர். கடலை அடைதற்குத் தடையில்லாமை போல, பாசம் அறவே நீங்கியவழி உயிர் சிவத்தை அடைதற்குத் தடையில்லையாதலின் அவ்வாறு சிவத்தை அடைதலே சிவப்பேறு ஆகும். எனவே. இறைவனால் உணர்த்த உணர்ந்த ஞானத்தினை நன்கு உணர்தலின் பயனாகப் பாசநீக்கமும், சிவப்பேறும் அடையப்படுதல் அறிக.

## அணைந்தோர் தன்மை

மாணாக்கன் : பாசம் நீங்கிச் சிவத்தை அடைந்தோர்க்கு அதன்பின் செயல் ஒன்றும் இல்லை அன்றோ !

ஆசிரியர் : செயல் ஒன்றும் இல்லை என்பது இல்லை. உடம்பு உள்ளவரையும் உலகத்தோடு தொடர்பு அறவே நீங்குதல் இன்மையால், அத்தொடர்பு காரணமாக ஆணவந் தோன்ருதவாறு பொருளியல்புகளை நினைத்தலும், தம்மைப்போன்ற சிவஞானியரோடல்லது பிறரோடு கூடாமையும், குரு லிங்க சங்கமங்களைச் சிவமாகவே அறிந்து கற்ரு மனம்போற் கசிந்து கசிந்தே உருகி வழிபடுதலும் ஆகிய இச் செயல்களிலேயே சிவப்பேறு பெற்றவர்கள் ஈடுபட்டிருப்பர். சிவப்பேறு பெற்றவர்களை, 'அணைந்தோர்' எனவும், 'சீவன் முத்தர்' எனவும் கூறுவர். அணைந்தோர், உடம்பு உள்ளவரையிலும் மேற்கூறிய அத்தன்மைகளை உடையவராய் இருந்து, உடம்பு நீங்கியவுடன் சிவத்தோடு இரண்டறக்கலந்து, சாயுச்சபரமுத்தியை அடைந்து சிவானந்தத்தில் திளைத்து இருப்பர் ; அவர்களுக்கு மீட்சி என்பது இல்லை. சுவர்க்க இன்பமாயினும் சிறிது காலத்திற்குப் பின் மீண்டு வேறு பிறப்பை எடுத்தல் வேண்டும் ஆதலாலும், தேவர் உலகத்திலும் துன்பம் உண்டு என்பது புராண வரலாறுகளால் நன்கு அறியப்படுதலாலும் மீட்சி இல்லாத, என்றும் இன்பத்தில் இருக்கும் வீடுபேறே எல்லாப் பேறுகளிலும் மேலான முடிந்த பயனாதல் அறிக.

[ தொடரும் ]

# திருவள்ளுவரும் அன்புடைமையும்

வித்துவான். திரு. சு. தேவசேனாபதி தேசிகர்

இன்று திருக்குறளில் அன்புடைமை என்ற அதிகாரம் பற்றிச் சிந்திப்போம். அன்பு, ஆசை, அவா, பாசம், கருணை, பக்தி, நட்பு, காதல் என்பன ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்கள். இந்தச் சொற்களில் அன்பு என்னும் சொல்லையே ஆசிரியர் பெரிதும் எடுத்துப் பேசுகின்றார்.

பல சொற்கள் இருக்க அன்பு என்னும் சொல்லை ஆசிரியர் எடுத்துக்கொண்டது நோக்கத் தகுந்தது. அன்பு என்பது மிகவும் பெரியது; வன்மையானது; சிறந்ததுங்கூட; அன்பு மிகப் பெரியது என்று இங்குக் குறிப்பிட்டேன். உலகில் மிகப் பெரிய பொருள் எது என்று கேட்டால் மலை என்று ஒருவன் கூறுவான்; மற்றொருவன் கடல் என்று கூறுவான். வேறு ஒருவன் மலையையும் கடலையும் உடைய இவ்வுலகமே பெரிது என்று கூறுவான். செம்மையாகச் சிந்தித்துப் பார்த்தால் இவற்றைவிடப் பெரிய பொருள் ஒன்று உண்டு என்பது விளங்கும். அதுவே கடவுள். கடவுளுக்கு மேல் பெரிய பொருள் இல்லை; இருக்கவும் முடியாது.

"மகதோர் மஹீயான்" என்பது வேதம். "அப்பாலுக்கப்பாலாய்" என்பது மணிவாசகம். பெரிய பொருள்களுக்கெல்லாம் மிகப் பெரிய பொருளாக விளங்குவது கடவுள் என்பது அவற்றின் பொருள். இத்தகைய பொருளாகிய கடவுளை அன்பு தன்னுள்ளே அடக்கிக்கொள்கிறது. ஆதலினாலே அன்பு எல்லாப்பொருள்களையும்விட மிகப்பெரியதுஎன்பது விளங்குகிறதல்லவா.

அன்பு மிகுந்த வலிமை பொருந்தியது என்று கூறினேன். வலிமை பொருந்திய பொருள்கள் எல்லாவற்றைக்காட்டிலும் கடவுளே மிகுந்த வலிமை படைத்தவர். "சர்வ வல்லமை பொருந்தியவர்" என்றும், "எல்லாம் வல்ல இறைவன்" என்றும் வழங்குவதை நோக்குக. இத்தகைய வல்லமையுள்ள இறைவனை அன்பு கட்டிப்பிடித்து நம்மிடம் சேர்க்கிறது. "பக்தி வலையிற்படுவோன் காண்க" என்றார் மாணிக்கவாசகர்.

எனவே அன்பு மிக்க வலிமையுள்ளது என்பது பெறப்படுகிறது. "அன்பென்ற தொன்றன்தன்மை அமரரும் அறிந்ததன்ஞல்" என்று கம்பர் கூறுவதனுல் அன்பின் சிறப்பு விளங்குகிறது. இக் காரணங்களிஞல் அன்பு என்ற சொல்லேயே ஆசிரியர் எடுத்துக் கொண்டார்.

இனி அன்புடைமை என்ற அதிகாரத்தை நோக்குவோம் இங்கே இரண்டு சொற்கள் காணப்படுகின்றன. ஒன்று அன்பு, மற்ருென்று உடைமை. அன்பு என்ருல் என்ன? நாளும் அன்பைப்பற்றிப் பேசுகின்ருேம். அன்பில் தோய்ந்து இருக் கின்ருேம். ஆஞல் அன்பு என்ருல் என்ன என்று கேட்டால் விடையளிக்க இயலாமல் திருதிரு என்று விழிக்கவேண்டி இருக் கிறது. விஞ எளிதாக இருக்கிறது. விடையோ மிக அரிதாக உள்ளது. விடையைக் காண்போம். உயிர்களின் நலங்கருதி இறைவன் இவ்வுலகைப் படைக்கத் திருவுளங்கொண்டான். அப்போது அவனிடம் இருந்து மூன்று சக்திகள் வெளி யாகின்றன. அவை இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்பன. இம்மூன்றும் வடமொழிச் சொற்கள். அவற்றிற்கு விருப்பம் அறிவு செயல் என்பன நேரிய தமிழ்ச் சொற்கள். பரமான்மாவான இறைவனுக்கு மூன்று சக்திகள் இருப்பன போன்று சீவான்மாவான உயிருக்கும் அறிவு செயல் விருப்பம் என்ற மூன்று சக்திகள் உண்டு. அவற்றுள் விருப்பம் என்னும் சக்தியானது மனத்தைக் கருவியாகக்கொண்டு பொருள்களைப் பற்றுகிறது. அதனையே அன்பு என்று அழைக்கின்ருேம்.

உடைமை என்ற சொல்லே நோக்குவோம். அன்புடைமை என்பதற்கு அன்புடையவஞக இருத்தல் என்றே பரிமேலழகர் முதலியோர் உரை கூறினர். ஆய்ந்து நோக்கிஞல் வேறு பொருளும் புலஞகின்றது. உடைமை என்பதற்குச் சொத்து- ஆஸ்தி என்ற பொருளும் உண்டு. நிலங்கள், மாடுகன்றுகள், வீடுகள், வாகனவசதிகள் முதலியன ஒருவனுடைய சொத்துக்கள்- ஆஸ்திகள் என்கின்ருேம். அவை அவனுடைய உடமைகள் ஆகும். இவற்ருல் அவன் அடையும் இன்பம் மிகச் சிறியது, அழிந்தும் போகக்கூடியது. அன்பையே உடைமையாகக் கொண்டால் அதனுல் உண்டாகும் இன்பம் மிகப் பெரியது, அழியாததும் ஆகும். எனவே அன்பாகிய உடைமை என்று கொள்வது சாலவும் சிறப்புடைத்தாகும்.

அடுத்து அன்பின் இருப்பை நாம் எங்ஙனம் அறியலாம் என்பதனைத் திருவள்ளுவர் வழிநின்று காண்போம். பொருள் களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை புலன்களுக்குப்

பொருளாகும் பொருள்கள், புலன்களுக்கும் பொருளாகாப் பொருள்கள். அவற்றை நுண்பொருள்கள் பருப்பொருள்கள் என்றும், குணப்பொருள்கள், குணிப்பொருள்கள் என்றும் சொல்லுவது உண்டு. குணப்பொருள்களைக் குணிப்பொருள் களின் வாயிலாகவே காணமுடியும் என்பது தர்க்கநூலின் முடிவு. இதனைத் தர்க்கநூல் வல்லவர்கள் சமவாயசம்பந்தம் என்று கூறுவர். அறம் என்பது ஒரு குணப்பொருள். அறவோன் என்ற குணிப்பொருள் மூலமாகவே அதனைக் காணமுடியும். அதுபோன்றே நீதிமான் வழி நீதியையும், அறிஞன் வழி அறிவையும், அன்பன் வழி அன்பையும் காணமுடிகின்றது. இந்த அருமையான நுட்பத்தை ஆசிரியர் திருவள்ளுவர் முதற் குறட்பாவால் விளக்குகின்றார்.

“ அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும் ”

தன்னால் அன்பு செய்யப்பட்டார் துன்பத்தைக் காணும்போது ஒருவன் கண்ணீர்விட்டுக் கதறுகின்றான். அங்ஙனம் அவன் கதறுவதற்குக் காரணம் அன்பு. அந்த அன்பை மறைத்து அடைத்து வைப்பதற்குத் தாழும் உண்டோ? இல்லையல்லவா? இதுவே இக்குறளின் கருத்து. இப்பகுதியில் அன்பு என்னும் குணப்பொருளை அன்புடையான் மூலமாகத்தான் காண முடிகின்றது. அடுத்த குறளை ஆய்ந்து நோக்குவோம்.

“ அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு ”

பிறர்மீது அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன்படுத்திக்கொள்வர். அன்புடையவர்களாயின் தம் என்பையும் பிறருக்குப் பயன்படும்படி கொடுத்து உதவுவர். என்பு என்றதனால் தசையையும் கொடுப்பர் என்பது விளங்கு கிறது. இதற்குச் சான்றாக உரையாசிரியர் இந்திரனுக்கு முதுகு என்பைக் கொடுத்த ததீசி முனிவர் வரலாற்றையும், புறவுக்காகத் தசையைத் தந்த சிபிச்சக்கரவர்த்தி வரலாற்றையும் கூறியது மிகவும் அருமையாகும். இக்குறளில் அமைந்த நுட்பத்தைக் கூர்ந்து நோக்குவோம்.

அன்பு என்பது உயிரினுடைய விருப்பம் என்னும் சக்தி யானது மனத்தைக் கருவியாகக் கொண்டு பொருள்களைப் பற்றுவது என்று கூறினோம். அங்ஙனம் பற்றும்போது அன்பு

இருவகையாக நிகழும். அதற்கு உற்சர்ப்பிணி, அவசர்ப்பிணி என்று பெயர். அவ்விரண்டும் வடமொழிச் சொற்கள்; மேல் நோக்கும் அன்பு, கீழ்நோக்கும் அன்பு என்று தமிழில் சொல்ல லாம். அன்பிலார் என்பவர் கீழ்நோக்கும் அன்புடையவர் - அவசர்ப்பிணி. அன்புடையார் மேல்நோக்கும் அன்புடையவர் - உற்சர்ப்பிணி ஆவர்.

கீழ்நோக்கும் அன்பினுல் துன்பமே உண்டாகும். மேல் நோக்கும் அன்பினுல் இன்பமே உண்டாகும். கீழ் நோக்கும் அன்பினுல் பாவமே ஏற்படும். மேல் நோக்கும் அன்பினுல் புண்ணியமே ஏற்படும். கீழ் நோக்கும் அன்பு தன்னுடைய நலத்தையே பெரிதும் நாடும். மேல் நோக்கும் அன்பு பிறர் நலத்தையே பெரிதும் போற்றும். கீழ்நோக்கும் அன்பு தனக்குத் துன்பம் வரின் மிகவும் வருந்தும். மேல் நோக்கும் அன்பு தனக்குத் துன்பம் வந்தால் இன்பத்தோடு ஏற்றுக் கொள்ளும், கீழ் நோக்கும் அன்பு பிறர் வருத்தங்கண்டு மகிழும். மேல் நோக்கும் அன்பு பிறர் வருத்தங்கண்டு பெரிதும் வருந்தும். கீழ் நோக்கும் அன்பு தனக்கெனவே வாழும். மேல்நோக்கும் அன்பு தனக்கென வாழாது பிறருக்காகவே வாழச் செய்யும். கீழ்நோக்கும் அன்பு துன்பத்தில் துன்பத்தையே காணும். மேல் நோக்கும் அன்பு துன்பத்திலும் இன்பங்காணவல்லது. கீழ் நோக்கும் அன்பு தீவினைகள் பல செய்து பல பிறவிகளுக்கு ஏதுவாகும். மேல்நோக்கும் அன்பு நல்வினைகள் பல இயற்றி பிறவிப் பிணியை வேரறுக்கும். கீழ் நோக்கும் அன்பு போக்கத் தகுந்தது. மேல் நோக்கும் அன்பு போற்றத் தகுந்தது. மேல் நோக்கும் அன்பையே திருவள்ளுவர் இந்த அதிகாரத்தில் போற்றுகின்றார். கீழ்நோக்கும் அன்பை அவா அறுத்தல் என்ற அதிகாரத்தில் கடிந்துரைக்கின்றார்.

கீழ் நோக்கும் அன்பு இந்தவுடலைத் தன்னுடையது என்றே நினைக்கச் செய்யும். மேல் நோக்கும் அன்பு இந்தவுடலைத் தன்னுடையது அல்ல என்றே நினைக்கச் செய்யும். இந்த வுடலைத் தன்னுடையது என்று எண்ணும் வரையில் இந்த உயிருக்கு வீடு பேறு கிட்டாது. உடல் தன்னுடையதல்ல என்ற எண்ணம் தோன்றும்போதே வீட்டுக்கு வித்திடும். சமய நூல் கள் அனைத்தும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. உடலைத் தன்னுடையது என்று எண்ணுமையினுலே சிபிச்சக்ரவர்த்தியும், ததீசி முனிவரும், தம் முடலில் உள்ள தசையையும் என்பையும் பிறருக்குப் பயன் படுத்தினர். இறைவன் திருக்கண்ணில்

குருதி பெருகுவது கண்டு தன் கண்ணை இடந்து அப்பினார் கண்ணப்பர்.

இங்ஙனம் இக்குறளினுள் நுழைந்து பார்த்தால் பல அரிய பொருள்கள் புலனாகும். அன்புடைமை என்னும் அதிகாரத்தில் அமைந்த பத்துக்குறட்பாக்களையும் ஆய்ந்து நோக்கினால் பற்பல அரிய நுட்பங்கள் வெளியாகும். இத்தகைய மேல் நோக்கும் அன்பைப்பெற்று வாழ்வின் பயன் அடைய இறைவன் திருவருள் துணை புரிவதாக.


## "ஞானசம்பந்தம்"

சமய இலக்கியக் கட்டுரைகளுடன் வெளிவரும்
திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்தி லிருந்து வெளிவருவது. சமயப்பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. சைவசமயிகள் அனைவரும் பயில வேண்டிய இதழ். சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

ஆண்டுக் கையோப்பம்

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

# அப்பர் நெறியில் அமரகவி

திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ.,

பாரதியின் கவிதைகளை ஓதிவரும்போது நாம் உணர்வது ஒன்றுண்டு; சிறப்பாக அமரகவியின் வீர கவிகளில் அப்பரின் செல்வாக்கு அமைந்திருப்பதே அஃதெனலாம். சமய உலகில் அப்பரடிகள் ஆன்மபலம் கொண்டு அஞ்சா நெஞ்சமுடன் விளங்கியமை போன்றே, அமர கவியும் அரசியல் உலகில் உறுதிகொண்ட நெஞ்சமுடன் ஒழுகிய ஒருமைப்பாடு உணரற்பாற்று.

பாரதியின் நெஞ்சம் அஞ்சாத் தன்மையது; இறைமை ஒன்றுக்கே உளம் நெகிழும் ஒண்மையது. இத்தகைய நெஞ்சம், சமய உலகில் தன்னையொத்த ஓர் உரம் சான்றவரைக் கண்டதும் அவரைப் பெரிதும் விரும்பியது; அவரது வீரம் சால் உரைகளையும் பொன்னேபோல் போற்றியது. அம்முறையில் தான் அமரகவியின் கவிகளில் அப்பரின் பொருளும் சொல்லும் பொதிந்துள; பொன்னொளிர் வீசுகின்றன.

அப்பர் ஓர் அருட்கவி, அமர கவியும் அப்படியே; முன்னவர் சமயத் தமிழ்வளர்த்த சால்பினர்; பின்னவர் தேசியத்தமிழ் வளர்த்த தக்கோர். முன்னவர் ஏழாம் நூற்றுண்டவர்; பின்னவர் இருபதாம் நூற்றுண்டையர். முன்னவர் திருமுனைப்பாடி நாடு தந்த தீந்தமிழ் வேந்தர்; பின்னவர் நெல்லைநாடுதந்த நற்கவி. முன்னையவர் திருவாமூர்ப் பாவலர்; பின்னையவர் இளசைப் புலவர். இருவரும் அரசியலில் விடுதலையுணர்வும், சமய நிலையில் ஆண்டான் பணி பூண்டவர். இருவருடைய உணர்வும் ஒன்றே; இருவரும் காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டிருப்பினும், உலகியலிலும் உளவியலிலும் ஒருமையுற்றே விளங்குகின்றனர். அவ்வொருமைப்பாட்டை இவண் ஆராய்வாம்.

சமண சமயத்தினின்றும் சைவ சமயத்திற்கு மாறி சிவத் தொண்டாற்றின்மை காரணமாகப் பல்லவ மன்னனின் அச்சுறுத்தலுக்கு ஆளானர்; நீற்றறையில் இட்டும், நஞ்சு ஊட்டியும்

யானையை ஏவியும், கல்லொடுகட்டிக் கடலில் இட்டும் துன்புறுத்தினான் மன்னன். அஞ்சாமையாலும், இறையுணர்வாலும் ஏதமின்றிச் சிறந்தார். பாரதியும் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தமை காரணமாக இன்னலுக்கும் இடும்பைக்கும் ஆளானார்; வெள்ளையர்தம் மிரட்டலுக்கும் வீணர்தம் தாக்குதலுக்கும் ஆட்பட நேர்ந்தும் உள உறுதியாலும், பராசக்தியின் தண்ணருளாலும் அவற்றையெல்லாம் எதிர்த்து ஏற்றமுற்றார். இருவரது வாழ்வும் இவ்வகையில் ஒருமையுறுவது போன்றே, அவர்களது எண்ணமும் ஒன்றுபட்டுள்ளது.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை.

என நவின்றார் நாவரசர்; தம் சமயத்துக்குக் கேடு சூழ்ந்தது கண்ட பாடலிபுரத்துச் சமணர்கள் மகேந்திர பல்லவனிடம், நாவரசர் சைவ சமயம் சார்ந்து சிறந்தமை செப்பி, அவருக்கு இன்னல் தரவேண்டிய ஞான்று, அரசன் படைவீரர்களை ஏவி நாவரசரை அழைத்து வருமாறு பணித்தான். அவர்களும் அப்பரை அணுகினர்; கண்டவர் கலங்கினாரில்லை; படைக்கலம் கண்டு பயந்தாரில்லை. இப்பதிகத்தையே பாடினார்; இத்துணிவு பாரதியின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. எனவேதான்,

"யார்க்குங் குடியல்லேன் யான்என்ப
தோர்ந்தனன் மாயையே! — உன்தன்
போர்க்கஞ் சுவேனோ? பொடியாக்கு
வேன் உன்னை மாயையே!"

என மாயையை எதிர்த்துப் பேசலுற்றார். இங்கே அப்பரின் செல்வாக்கு அமரகவி பாரதியின் பாட்டில் பிறங்குமாறு அறிக.

அமணர்கள் விழைவின் வண்ணமே அரசன் அப்பரை நீற்றறையில் இடுவித்தான்; ஆனாலும் அப்பர்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே!"

எனப்பாடி இறைவன் திருவடியை இதயத்தில் இருத்தி ஏழுநாள் அளவும் ஏதமின்றி இருந்தார். பின் நஞ்சுணவு ஊட்டினர்; உண்டும் ஊனமில் ஆனந்த வடிவினராய் அமைந்தார். பின் யானையை ஏவினர்; 'சுண்ண வெண் சந்தனச் சாந்தும்' எனும் பதிகம்பாட அவ்யானை அவரை வலம் வந்து பணிந்து ஏவிய பாவிகளையே எற்றத் தொடங்கிற்று. அப்பரடிகள் நீலகண்டன் நல்லருள் பெற்று,

"அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை"

எனப்பாடினர். இப்பாட்டே பாரதிபாடிய வீரப்பாடல்களிலேயே தலைசான்ற பாட்டாக - பண்டாரப் பாட்டினைப் பாடுதற்கு அடிப் படைஆகும் என்றால் அஃது எத்துணையும் மிகையாகாது.

பச்சையூன் இயைந்த வேற்படைகள் வந்தபோதினும்
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்பதில்லையே!

என்றும்;

நச்சை வாயிலே கொணர்ந்து நண்ப ரூட்டு போதினும்
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே!

என நாவரசரை நினையுமாற்றான் தம்முடைய தறுகண்மையை நாட்டுகின்றார் நந்தம் அமரகவி; உள்ளத் துணர்வை சொல்லியேவடிப்பதன் மூலம் உளவலிமையை மிகுவிக்கின்றார்.

அப்பரின் சமய மாற்றம் காரணமாக சமண உலகே அவரை எதிர்த்தது; சைவ சமயப் பெரியார் என்பதும் மறந்து அவரைத் துச்சமாக எண்ணினான் மன்னன். இதுபோன்றுதான் வெள்ளை யரும், ஆங்கில ஆட்சியினரும் தம்மைப் போன்றாரைத் துச்சமாக எண்ணி எதிர்த்தனர்; இன்னல் விளைத்தனர். இதனை எண்ணியே,

"இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே!
துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்த போதினும்
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே!"

எனப் பாடினர்.

இறையருள் அமைந்தார்க்கு எது நேரினும் நெஞ்சம் அஞ்சாதன்றோ? 'வானந் துளங்கி லென்? மண்கம்ப மாகி லென் ஊன மொன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே' எனும் அப்பர் அமுத வாக்கு நோக்குக. அதனாற்றான்,

" மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே!"

என்றார் அப்பர். இதனைத்தான் பாரதியும்,

" உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என ஆணித்தரமாக அறைந்தார்.

அப்பர் பெருமையை அனைத்துலகும் அறியுமாறு, இறைவன் மங்கையரை அவர்பால் ஏவி இதய உறுதியறியப் பணித்தார். வேற்படை கண்டு கலங்காத அப்பர், இவ் வேல் விழிக்கு ஆட்படுவரோ? நாவரசர் நெஞ்ச உறுதிக்குமுன் நங்கையர் நாணித் தோற்றனர். இதே நிலை பாரதிக்கும் ஏற்பட்டதாம். பகைவர் பாரதியை ஆட்படுத்துமாற்றான் மங்கையரை ஏவியதாகவும், பாரதி திண்ணிய நெஞ்சினராய்த் திடமுடன் இருந்ததாகவும் கூறப்படுகிறது. அப்பருக்கும் தமக்கும் நேர்ந்த அச்சோதனையை எண்ணி,

" ..................................மாதர்
கண்கள் வீசு போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே!"

எனப்பாட்டிசைத்தார்.

இன்னணம் எது கண்டும் அஞ்சாது, யாருக்கும் தலை வணங்காதுஇருந்த இருவரும், ஆண்டவன்பால் நீண்டஅன்பும் நெகிழ்ந்த காதலும் கொண்டு அஞ்சியழைத்தனர். 'நாமார்க்கும் குடியல்லோம்' எனவும், பாராண்டு பகடேறி வருவார் சொல்லும் பணி கேட்கக் கடவோமோ' என்றும் இயம்பியவர்,

" தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே"

என்றும், 'சிவனே என்னும் நாவுடையார் நமையாள உடையார்' என்றும் பரமனருள் பராவுதல் பார்மின்! இதுபோன்றே தான் பாரதியும்,

" பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம் — பரி
பூரணனுக்கே யடிமை செய்து வாழ்வோம்"

என்கிறார். இங்கே, 'ஆர்க்குங் குடியல்லாத் தன்மையன்' எனும் அப்பர் வாக்கு, பாரதியில் 'பரிபூரணன்' எனப் பரவப்பட்டு உள்ளமை காண்க.

அரசியலிலும் ஆண்டவன் பணிவிலும்தான் இருவரும் ஒருவராக ஒளிர்கின்றனர் என்றெண்ணவேண்டா.

'சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்' என்றார் அப்பர்; பாரதியும்,

" மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கு மதியிலிகாள்! — எத
னூடுநின் றோங்கு மறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ?

என்று எள்ளுகின்றார். இதனால் சிறுதெய்வ வணக்கம் அப்பருக்கும் அமர கவிக்கும் உடன்பாடு அன்றென்பதுணர்க. இன்னும்,

" சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ

என்பது, 'சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்' எனும் அப்பர் அடிகட்கு ஒப்பாக அமையும் ஒப்புமை ஓர்க.

இங்கே நாம் உணர வேண்டியது ஒன்று; சமயச் செய்தி மக்களிடை செல்வாக்குப் பெற்றிருப்பது கண்டுகொண்ட பாரதி, அச் சமயச் செய்தியை யொட்டியே அரசியல் உணர்வை மக்களின் சிந்தையில் ஊட்டும் புதிய போக்கினை மேற்கொண்டார்; இதற்குத் திருவாசகத்தில் உள்ள 'தெய்வப்பள்ளி எழுச்சியை', 'பாரதமாதா பள்ளியெழுச்சியாகப் பாடியமையே போதிய சான்றாகும். அம்முறையில்தான் அப்பர் வாக்கினைத் தம்கால அரசியல்வாக்கில் அமைத்த அமரகவியின் போக்கினைப் புது நெறியினைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இதுகாறும் கண்டவற்றால் அப்பரது வாழ்வு அமரகவியின் வாழ்வும் ஒன்றேபோல் அமைந்தமையும், அவ்விருவர் நோக்கும் வாக்கும் ஒருமையுற்று விளங்குவதும் கண்டோம்; இன்னணம் ஏழாம் நூற்றாண்டைய சமயக் கவிஞரும், இருபதாம் நூற்றாண்டைய அரசியல் கவிஞரும் காலத்தாலும் இடத்தாலும் வேறுபடினும், நெஞ்சாலும் நினைவாலும் ஒருமையுற்று ஒளிர்கின்றனர். உணர்ந்தோம்; ஏழாம்நூற்றாண்டைய சமயக் குரவரின் செல்வாக்கு, இருபதாம் நூற்றாண்டைய அரசியல் தமிழ் மகனின் எண்ணத்தில் இணைந்தும் பிணைந்து நிற்பது தெளிந்தோம்.

மதிப்புரை

# தமிழ் மொழி - இலக்கிய வரலாறு

## ( சங்ககாலம் )

[ ஆசிரியர் : டாக்டர். மா. இராசமாணிக்கனுர் M. A., L. T., M. O., L. Ph. D. அவர்கள் ; விற்பனை உரிமை: பாரிநிலையம், 59, பிராட்வே, சென்னை - 1 ; பக்கங்கள் 320 ; விலை ரூ. ஐந்து ]

செந்தமிழ் மொழிக்கு அமைந்த இலக்கிய வரலாறுகள் இன்றுபல நம்மிடை உள்ளன. திரு. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், தஞ்சை திரு. கே. எஸ். சீனிவாசப்பிள்ளை, திரு. சா. சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் எழுதிய நூல்கள் உள்ளன ; தமிழ் இலக்கியம் பற்றிய சொற்பொழிவுத் தொகுப்பாக உள்ள திரு. இராமசாமி நாயுடுவின் நூலும் உள்ளது. திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார் எழுதிய ( " Hislory I the Tamils " ) தமிழர் வரலாறும், திரு. வையாபுரிப்பிள்ளை எழுதிய இலக்கிய வரலாறும் உள்ளன. இவை பெரும்பாலும் இலக்கிய வரலாருக எடுத்துக் கொண்டு, எல்லா இலக்கியங்களைப் பற்றியும் எழுதிய போதிலும், அவைபற்றிய எல்லாச் செய்திகளையும் முற்றத்தந்தன என்று சொல்லிவிட முடிய வில்லை. ஆதலால், ஆசிரியர் தம்முன்னுரையிற் கூறியிருப்பது போல், " ஆங்கில இலக்கிய வரலாற்று நூல்களில் ஒரு நூலின் ஆசிரியர் பெயர், அவர் வாழ்க்கைச் சுருக்கம், காலம், அவர் செய்த நூல்கள், அந் நூற் செய்திகளின் சுருக்கம், அவை பற்றி இலக்கிய வரலாற்ருசிரியர் கருத்துக்கள் என்னும் முறையில் செய்திகள் காணப்படுதல்போல் ஒரு விரிவான வரலாறு தேவையாயிற்று. தினேஷ் சந்திர சென் என்பவரால் இயற்றப்பெற்ற வங்க மொழி இலக்கிய வரலாறு போல், தமிழ் மொழி - இலக்கிய வரலாற்றை விரிவாகப் பாராட்டத்தக்கபாங்கில், எல்லாச் சான்றுகளுடன் சென்னைப்பல்கலைக் கழகத் துணைத் தமிழ்ப் பேராசிரியராக விளங்குபவரும், சிறந்த ஆராய்ச்சிப் பெரும்புலவரும், பெரிய புராண ஆராய்ச்சி சைவ சமய வளர்ச்சி முதலிய ஆராய்ச்சிப் பனுவல்களைத் தமிழ் உலகுக்கு வழங்கிய வரும் ஆகிய சைவ இலக்கியப் பேரறிஞர், சைவ நெறிக் காவலர் டாக்டர். மா. இராசமாணிக்கனுர் அவர்கள் எம். ஏ., எல். டி. எம். ஓ. எல். எழுதி உதவியுள்ளார்கள். இந்நூல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர், பேராசிரியர் டாக்டர், மு. வரதராசனர் அவர்களால் எழுதப்பட்ட மொழி வரலாற்றையும் ஏனைய மொழியாராய்ச்சிப் பனுவல்களையும் ஒட்டிய பொது

வரலாறுக முதற்கண் போந்து, பின் சங்க காலத் தமிழ் இலக்கிய வரலாற்றைத் திறம்பட உரைக்கின்றது. இலக்கிய ஒருமைப்பாடு காட்டுவதுடன் கால ஆராய்ச்சியையும் இவ்வாசிரியர் செப்பமாகச் செய்துள்ளார்.

தொல்காப்பியத்தின் காலம், திருக்குறளின் காலங்களை ஆராய்ந்து முடிவு போக்கியிருப்பது. உணர்தற்குரியது, கலித்தொகையின் ஆசிரியர் ஐவரல்லர் என்பதைத் தக்ககாரணங்கள் காட்டி இந்நூலில் ஆசிரியர் நிறுவியுள்ளார் (ப. 195). இவ்வாறே சங்க இலக்கியங்களின் நுவல்பொருள் சிறப்புச் செய்திகள், முதலிய அனைத்தையும் தெளிவுறவிளக்கி ஆசிரியர் ஓர் ஆராய்ச்சிக் கருவூலமாக இந்நூலைத் தந்துள்ளார். ஏனைய கால இலக்கிய வரலாறுகளையும் இவ்வாசிரியர் வழி இனிது பெறத் தமிழுலகிற்கு இறைவன் அருள் புரிவானாக.

தமிழ் ஆராய்ச்சியாளர், மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும், உலகத் தமிழர் இல்லந்தோறும், நூலகந்தோறும் தவறுமல் இருத்தற்குரிய உயர் தகுதி உடைய நூல் இது.

— சொ. சிங்காரவேலன் எம். ஏ.

## மேழி விளக்கம்

[ ஆசிரியர்: சரவணையா; பதிப்பாசிரியர், வித்துவான். திரு. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர், கிடைக்குமிடம்:- வித்துவான், வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர், வேலம் பாளையம், எழுமாத்தூர் (P. O.) ஈரோடு (வழி) பக்கங்கள் 52: விலை - 0-75 ந. பை. ]

திரு. கவுண்டர் அவர்கள் தமிழ்ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்து நாடிப் பதிப்பிப்பதில் பெருந்தகைமை உடைய நற்புலவர். இவரால் வெளிவந்திருக்கும் பழைய சுவடிகள் பலவற்றுள் வேளாளர் பெருமையை விரித்துரைக்கும் செய்யுள் நூல் இது. சென்னிமலை முருகன் பெருமையை அழகுற விளக்குகின்றது. பதிப்பாசிரியர் கி. பி. 14ம் நூற்றுண்டினதாயிருக்கலாம் என இதனைக் கருதுகின்ருர். நூலின் நடை இன்னும் மிக மிகப் பிற்காலத்ததாகவே கருதுமாறு உள்ளது. 621 கண்ணிகள். தக்க குறிப்புரையும் இணைக்கப்பட்டுள்ளது. வேண்டுவோர் ஆசிரியர்க்கு எழுதிப்பெற்று, மேலும் தமிழ்ப்பணியில் அவரை ஊக்குவித்தல் நன்றும்.

— "செவ்வேள்"

# செய்திகள்

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களது தலயாத்திரை

திருக்கயிலாயபரம்பரைத் திருத்தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ காசி விசுவநாதர், ஸ்ரீ கேதாரநாதர், ஸ்ரீ பத்ரிநாதர் தரிசனத்திற்காகத் தலயாத்திரை செய்யத் திருவுளம் பற்றினார்கள். தலயாத்திரைக்கான முன்னேற்பாடுகள் எல்லாம் தீவிரமாக நடைபெற்றன. ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயிலிலும் லக்ஷார்ச்சனைகளும், விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் சிறப்புற நிகழ்ந்தன. 12—9—63 வியாழக்கிழமை இரவு திருத்தருமையிலிருந்து எழுந்தருளினார்கள்.

17—9—63 செவ்வாய்க்கிழமை மகாளய அமாவாசையன்று ஸ்ரீகாசியில் கங்கையில்நீராடி ஸ்ரீ காசி விசுவநாதரைத் தரிசித்து மகிழ்ந்தார்கள். பின்னர், ஸ்ரீ காசியிலிருந்து பல தலங்களையும் வழிபட்டு ஸ்ரீ கேதாரத்திற்கு எழுந்தருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீகயிலைக்குருமகாசந்நிதானம் அவர்களுக்கு ஸ்ரீகேதாரயாத்திரை இது முதல்தடவையன்று; முன்பே பலமுறை யாத்திரை செய்து ஸ்ரீ கேதாரநாதரை வழிபட்டிருக்கின்றார்கள்; எனினும், இது புரட்டாசித்திங்கள்; கேதாரநாதத்திற்குச் செல்ல வழி சரியில்லாதகாலம். கேதாரநாதத்திற்குச் செல்வோர் யாவரும் செப்டம்பர் மாதத்திற்குள்ளாகவே தங்கள்யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பிவிடுவார்கள். இத்தகைய கடுமையான நாளில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கேதாரத்திற்கு எழுந்தருளியது இதுவே முதல்தடவையாகும். இந்தநாளில் திருக்கேதாரநாதரை வழிபடவேண்டும் என்னும் திருவுள்ளத்தினால் உறுதியுடன் அங்கு எழுந்தருளினார்கள். எழுந்தருளி ஸ்ரீ நடராஜர் அபிஷேகத்தை அடுத்த தரிசன நாளாகிய 2—10—63 புதன்கிழமை பௌர்ணமியன்று

ஸ்ரீ கேதாரநாதரை இனிது தரிசித்தார்கள். அங்கு இன்று காணப்படும் இயற்கைக் காட்சிகளையும் கண்டருளினார்கள். பின்பு ஸ்ரீ பத்ரிநாதர் தரிசனத்திற்கும் எழுந்தருளியிருக்கிறார்கள். திருமாலுக்கு உரிய புரட்டாசித் திங்களில் ஸ்ரீ பத்ரிநாதத்திற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் செல்வதும் இதுவே முதல்தடவை.

## முதலமைச்சருக்குத் திருவருட்பிரசாதம்

சென்னைமாநில முதலமைச்சராக நல்லறங்காவலர். கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றது வரவேற்கத்தக்கது. அவர் காந்திஜி பிறந்த நாளாகிய அக்டோபர் 2-ஆம் நாள் பதவி ஏற்றது மிகமிகப் பொருத்த மானது. அது குறித்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் முதலமைச்சர் பதவியேற்ற கனம். M. பக்தவத்சலம் அவர்கட்கு ஆதீனத் திருக்கோயில்களின் பிரசாதங்களை நேரில் சென்று வழங்குமாறு அருள்பாலித்தார்கள். அதன்படி சென்னை சமயப் பிரசார நிலையம் வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், சிவாசாரியர்கள் நால்வரும் சென்று அமைச்சர் அவர்களைக் கண்டு பிரசாதங்கள் வழங்கினர். முதன்முதல் வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் பிரசாதம் வழங்கி பொன்னாடை போர்த்தினார்கள். அடுத்து வைத்தீஸ்வரன்கோயில், திருக் கடவூர், சீகாழி, திருவையாறு முதலிய திருக்கோயில்களின் பிராசாதங்கள் முறையே வழங்கப்பட்டன. பிறகு சமயப்பிரசார நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் சங்கீதபூஷணம். திரு. P. சுவாமிநாதன் அவர்கள் திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட கோளறு பதிகத்தை இசையுடன் பாடினார். இறுதிப் பாடலில் உள்ள "அரசாள்வர் ஆணை நமதே" என்ற அடியைப் பாடி முடித்தவுடன் திருஞானசம்பந்தர் வாக்கால் "அரசாள்வர்" என்று வாழ்த்துகிறோம் என்று சுவாமிகள் கூறியவுடன் அமைச்சர் அவர்கள் மகிழ்ந்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர் கட்குத் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். நிழற் படங்களும் எடுக்கப்பட்டன.

## திருத்தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில்
## ஐம்பெருங்காப்பியத் திருநாள்

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகத்தின் சார்பில் ஐம்பெருங்காப்பியத் திருநாள்

26—9—63 வியாழக்கிழமையன்று கழகத் தலைவரும், கல்லூரி முதல்வருமான செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன், M. A., அவர்கள் சீரிய தலைமையில் இனிதே நிகழ்ந்தேறியது.

உதவிச்செயலாளர் திரு. ஆ. மகாலிங்கம் அனைவரையும் வரவேற்று அறிக்கையை வெளியிட்டார். தலைவர் தம் முன்னுரையில், ஐம்பெருங் காப்பிய வரிசையில் இறந்துபட்ட வளையாபதி குண்டலகேசி என்ற இரு நூல்களையும் விலக்கிவிட்டு அவ்விடத்தைச் சேக்கிழாரடிகளின் பெரியபுராணத்திற்கும். கம்பரது ராமாயணத்திற்கும் நல்குதல் முற்றிலும் ஏற்புடையதே! அவை இரண்டும் காப்பிய இலக்கணங்களை வழுவாது தன்னுட்கொண்டு திகழ்வன என்றார்.

ஐம்பெருங்காப்பியங்களைப் பற்றியும் திருவாளர்கள், கோ. கவியபெருமாள், திரு. இராமதாசு, அ. அ. ஞானசுந்தரத் தரசு. இராம. சண்முகம் ஆகியோர் சிறப்புற உரையாற்றினர், செயலர் நன்றிநவில நாட்டுவாழ்த்தோடு கூட்டம் இனிதே நிறைவெய்திற்று.

## அண்ணல் காந்தியடிகளின்
## பிறந்தநாள் விழாவும், பன்மொழியரங்கமும்

அடுத்து அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர்த்திங்கள் இரண்டாம்நாள் பன்மொழியரங்கமாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் செஞ்சொற்கொண்டல் வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன், M. A., அவர்கள் தலைமையேற்றார்கள்.

முதற்கண் மாணவர்கழகச் செயலாளர் திரு. இரா. செல்வக் கணபதி அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினர்.

தலைவர் தம் முன்னுரையில் காந்தியடிகள் காட்டிய வழியில் யாதானும் ஒன்றையேனும் பின்பற்ற முயலுதல் மாணவர் கடன் என்றார்.

பன்மொழியரங்கில் கலந்துகொண்டு அண்ணல் காந்தியடிகள் ஆற்றிய அரும்பெருந் தொண்டுகளை எல்லாம் திருவாளர்கள், சி. சுகேசன், ப. பாலசுப்பிரமணியன், க. செல்லப்பா,

து. பலராமன், மா. கிருட்டினமூர்த்தி, மா. கலியபெருமாள் ஆகியோர் முறையே வடமொழி, இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் " கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க், கேளாரும் வேட்பச் " சிறப்புற எடுத்துரைத்தனர்.

திரு. ப. சங்கரமகாலிங்கம் அண்ணல் காந்தியடிகளின் புகழை இனிதே பாடினார். தலைவரவர்கள் முடிவுரையில் மாணவர்களின் பன்மொழிப் புலமையைப் பாராட்டினார்கள்.

செயலர் நன்றி நவின்றபின்னர் நாட்டுவாழ்த்தோடு விழா இனிதே நிறைந்தது.

### சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

## வைத்தீஸ்வரன்கோயில்

## கிருத்திகைப் பிர்சாதம் வழங்குவிழா

வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ தையல்நாயகி அம்மை உடனுறை ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் 16—7—63 கிருத்திகையன்று சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலைய அன்பர்கள் சார்பில் அபிஷேகமும், சகஸ்ரநாம அர்ச்சனைகளும் நிகழ்த்தி டி பிரசாதங்கள் 17—7—63 மாலை 7 மணிக்கு சென்னைத் தியாகராய நகரில் உள்ள தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப் பெற்றன.

13—8—63 கிருத்திகைப்பிரசாதம் 14—8—63 புதன்கிழமை மாலை 7 மணிக்கு மேலையூர் சிவராஜயோகமடம் சிவத்திரு. மாணிக்கவாசகஞானதேசிக சுவாமிகள் அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பட்டது.

9—9—63 கிருத்திகைப்பிரசாதம் 10—9—63 செவ்வாய்க் கிழமை மாலை 7 மணிக்குப் பைந்தமிழ்ச்செல்வர், திரு. ச. சிவகுமாரன் M. A., அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பட்டது.

6—10—63 கிருத்திகைப் பிரசாதம் 7—10—63 திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு திரு. டி. கே. சுப்பிரமணிய பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரப் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் வேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ் ஓதி பிரார்த்தனை நிகழ்த்தினர். பின்னுள்ள மூன்று நிகழ்ச்சிகளிலும் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்கள்.

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலைய மாதாந்தர சமயப் பிரசார வழிபாடும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குரு பூசை விழாவும் 28—7—63 ஞாயிறு மாலை கோடம்பாக்கம் ஸ்ரீ வேங்கீஸ்வரர் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. திரு. S. வடிவேல் பிள்ளை B. A., L. T., அவர்கள் தலைமையில் கயப்பாக்கம், திரு. சோமசுந்தரம் செட்டியார், திரு. K. L. பழநிசாமி பிள்ளை B. A., L. T., ஆகியோர் சமய விரிவுரை நிகழ்த்தினர். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரை கூறினர்கள். திரு. P. சுவாமிநாதன் தேவாரத் திருமுறை ஓதி மகிழ்வித்தார். திரு. K. C. நாகலிங்க முதலியார் உபயத்தில் அபிஷேக ஆராதனை நடைபெற்றது.

18—8—63 ஞாயிறு மாலை கோடம்பாக்கம் புலியூரில் உள்ள ஸ்ரீ பார்த்வாஜேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடும், சமயப் பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. வழிபாட்டுக் குழுவினர் மதியம் இரண்டு மணிக்கு உழவாரப்பணிபுரிந்தனர். முன்னாள் அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராம பிள்ளை அவர்கள் உழவாரப் பணியைத் தொடங்கி வைத்தார்கள்,

சிவத்திரு மாணிக்கவாசகஞானதேசிக சுவாமிகள் தலைமையில் திரு. S. வடிவேல் பிள்ளை பி ஏ., எல். டி., திரு. K. L. பழநிசாமி பிள்ளை பி. ஏ., எல். டி., திரு. T. மருதப் பிள்ளை பி. ஏ., கயப்பாக்கம், திரு. சோமசுந்தரஞ் செட்டியார், திரு. ச. சிவகுமாரன் ஆகியோர் சமய விரிவுரை நிகழ்த்தினர். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரை பகர்ந்தனர்.

திரு. P. சுவாமிநாதன் தேவாரத் திருமுறை ஓதி மகிழ்வித்தார். திரு. S. வடிவேல் பிள்ளை உபயத்தில் அபிஷேக ஆராதனை நடைபெற்றது.

29—9—63 ஞாயிறு மாலை நுங்கம்பாக்கம் ஸ்ரீஅகஸ்தீஸ்வரர் ஆலயத்தில் வழிபாடும், சமயப் பிரசாரமும் சிறப்பாக நடைபெற்றன. வழிபாட்டுக் குழுவினர் சார்பில் அபிஷேக ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. குழுவினர் சிவபுராணம் ஓதிக்கொண்டு மாடவீதி வலம்வந்து முறையாக வழிபாடியற்றினர்.

ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை, திரு. ச. சிவகுமாரன், திரு. கு. ஐயா. சுப்பிரமணிய முதலியார், திரு. K. L. பழநிசாமி பிள்ளை ஆகியோர் சமய விரிவுரை நிகழ்த்தினர். திரு. P. சுவாமிநாதன் தேவாரத் திருமுறை ஓதி மகிழ்வித்தார். வழிபாட்டுக் குழுவின் தாய்மார்கள் கோலமிட்டுக் கோயிலை அலங்கரித்தனர்.


## வைத்தீசுவரன்கோயில் சேவார்த்திகள் விடுதி

தருமையாதீனத்துக்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயிலில் சுவாமி தரிசனத்துக்கு வெளியூர்களிலிருந்து வரும் சேவார்த்திகள் தங்க வசதியின்றி இருந்த குறையைப் போக்கத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வைத்தீசுவரன்கோயில் இரயிலடிக்குச் சமீபம் சேவார்த்திகள் தங்கும் விடுதி ஒன்று கட்டச்செய்து, (நாள் ஒன்றுக்கு அறை ஒன்றுக்கு வாடகை ரூ. 1) என்ற முறையில் அன்பர்கள் உபயோகத்துக்கு விடச்செய்திருக்கிறார்கள். இப்பொழுது எட்டு அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் அதிக அறைகள் கட்டவேண்டுமென்பது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களது திருவுள்ளம்.

எல்லாம் உனது செயலென் றறிந்தும் என துளத்தில்
பொல்லாத சங்கற்பம் ஏன்வரு மோபுர மூன்றெரிக்க
வல்லாய் கமலையின் ஞானப்ர காச வரதஇது
சொல்லாய் கரண மயக்கமன் றேஎன் தொழிலல்லவே.

— குருஞானசம்பந்தர்

திருக்கயிலாயபரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம்
மகாகும்பாபிஷேக விழாவில்



சென்னை மாநில முதலமைச்சர் "நல்லறங்காவலர்"
கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள்
கோயில் மரியாதைகளுடன் தரிசனத்திற்குச் செல்லுதல்

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

( சோபகிருதுவூ ஐப்பசிமீ 1௨ முதல் 30௨ முடிய)

( 18—10—63 முதல் 16—11—63 முடிய )

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

அசுவதி நான்கு பாதங்களும் மிச்ரபலனைத் தரும். அடிக்கடி சஞ்சாரமும், அதிக செலவினங்களும் ஏற்படச்செய்யும். பரணி 1, 2 பாதங்கள் சுப சந்தோஷங்களையும், வம்சவிருத்தி யோகங்களையும் தரும். பரணி 3, 4 பாதங்களும், கார்த்திகை முதல் பாதமும் ரணரோக சத்ருபாதைகளையும், மனக்லேசங்களையும் உண்டுபண்ணும். மாதக் கடைசியில் 10 தினங்கள் சுபமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½.**

ரிஷபராசி 9 பாதங்களும் உத்தியோக உயர்வைத் தரும். லாபகரத்தோடு இடம் மாறச்செய்யும். வெகு தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் கிடைக்கும். மாத மத்தியில் வைத்தியச் செலவு அதிகமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾.**

மிதுனராசி 9 பாதங்களும் வரவு செலவு சமமாகும். எதிர்பாராத சில நன்மைகளையும் உண்டுபண்ணும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கச் செய்யும். ஆரோக்யம் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

**4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.**

கடகராசி 9 பாதங்களும் சுபத்தை உண்டுபண்ணும். தன தான்ய விருத்தி ஏற்படும். வியவகாரம் ஜெயிக்கும். நஷ்டமான

பொருள் வந்துசேரும். குடும்பம் ஓங்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். அடிக்கடி வீண் அலைச்சல்களை உண்டுபண்ணும். காரியங்கள் தவக்கமாய் நடக்கச்செய்யும். மனம் சாந்தி இராது. சனி, செவ்வாய் சுபமாகும்.

## 6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் அதிகத் தொல்லைகளை உண்டு பண்ணும். செலவினங்கள் அதிகமாகும். ஹஸ்தம் 1, 4 பாதங்கள் சுபத்தைத் தரும். தெய்வசக்தி ஓங்கச்செய்யும். தன தான்ய விருத்தியாகும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். ஹஸ்தம் 2, 3 பாதமும், சித்திரை 1, 2 பாதங்களும் குடும்பத் தொல்லைகளைத் தரும். வைத்தியச் செலவு அதிகமாகும். மனம் நிம்மதி இராது. ஆனாலும் மாதக் கடைசியில் சுபம் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 7. துலாம். சித்திரை ½, - சுவாதி - விசாகம் ¾.

சித்திரை 3, பாதங்களும், சுவாதி 1, 2 பாதங்களும் மிச்ர பலனைத்தரும். சதா அலைச்சல் ஏற்படச்செய்யும். செலவினங்கள் அதிகமாகும். தூர தேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். சுவாதி 3, 4 பாதங்களும், விசாகம் 1, 2, 3 பாதங்களும் ஜெயத்தையும், லாபத்தையும் தரும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். சகல காரியங்களும் சித்தியடையும். எதிர்பாராத தன தான்ய லாபங்களைத் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 8. விருச்சிகம். விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விசாகம் நாலாம் பாதமும், அனுஷம் நான்கு பாதங்களும் மிகுந்த பிரயாசையின்பேரில் சகல காரியமும் சாதிக்கச்செய்யும். விவசாயத்தில் பலன் குறைந்து காட்டும். ஈதிபாதைகள் அதிகமாகும். கேட்டை நான்கு பாதங்களும் ராஜாங்கத்தால் பல நன்மைகளை உண்டுபண்ணும். ஜீவனம் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டுபண்ணும். இல்லறம் தழைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$**

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். தீர்த்த யாத்திரைகளைத் தரும். நஷ்ட தனம் தானாக வந்துசேரும். கீர்த்திபத்திரம் கிடைக்கச்செய்யும். உத்தியோக உயர்வு ஏற்படும். புத்திரனால் சந்தோஷம் உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$**

மகரராசி 9 பாதங்களும் சுபமேயாகும். மேல்பதவி கிடைக்கச் செய்யும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கையைத் தரும். மேலோர் பெரியோர்களுடைய அன்பு கிடைக்கும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.**

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். நூதனமான தொழில்கிடைக்கச்செய்யும். அன்னிய தேசத்தவர்களின் நட்பைத் தரும். உயர்பதவி கிடைக்கும். பெரியோர்களின் நட்பை உண்டு பண்ணும். சனி, செவ்வாய் சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் தெய்வசக்தியை ஓங்கச்செய்யும். அநேகவிதத்தாலும் பொருள் வரத்து ஏற்படச்செய்யும். வெகு தூர தேசத்திலிருந்தும் நண்பர்கள் மூலமாயும் அசாத்தியமெல்லாம் சாதிக்கும்படியான தன்மை ஏற்படச்செய்யும். எங்கும் பிரசித்தி ஏற்படும். ஆரோக்கியம் உண்டாகும். மனம் நிம்மதி அடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு:- மேற்படி மாதம் உலகில் ஸஸ்யதான்ய விருத்தி காரியங்களில் பலவிதமான சிரமங்களைத் தரும். இயற்கைகள் எல்லாம் மேற்படி மாதத்துக்குரியபடி இல்லாமல் மாறி மாறி நடக்கும். அனேகவிதமான உத்பாதரூப ஈதிபாதைகள் காட்டும். உத்தர தேசத்திலும், த்வீபாந்தரங்களில் அன்னிய நாடுகளிலும் எதிர்பாராத திவ்ய பௌம அந்தரிக்ஷம் முதலிய இயற்கைக் கோளாறுகளால் பயத்தைத் தரும். நமது பாரத பூமிக்கு யார் யாரால் துன்பம் உண்டாகிறதோ அவர்களுக்குள்ளேயே மன வேற்றுமை ஏற்பட்டு கலகம் செய்துகொண்டும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டும் மடிவார்கள். நமது

பாரத பூமியில் பாப வசத்தால் ஏற்படக்கூடிய சகல தோஷங்களையும் தர்ம தேவதைகள் முன்னின்று காக்கும். சத்துருக்கள் தானாகவே மடிவார்கள். உத்தரதேசத்தில் துர்பிக்ஷங்களால் கொஞ்சம் கஷ்டங்கள் உண்டானாலும் தென்பாரதம் ஓங்கி ஸஸ்ய விருத்தியையும், தான்ய விருத்தியையும் தரும். ஆனாலும் மேற்படி மாதத்தில் ஈதிபாதைகள் எல்லாம் கொடுக்கக்கூடியதாக இருப்பதால் சென்ற மாத இதழில் கண்டபடியே மகாஜனங்கள் ஒன்றுசேர்ந்து தெய்வத்தையே நம்பி உலக க்ஷேமத்துக்காக பாடுபட நமது பாரதபூமி உலகிலேயே முதன்மையாக விளங்கும். கடவுள் காப்பாராக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

Extract of remarks left by the leader, Sri Vimalkumar, of the cultural Troupe of the Madhya Pradesh and these of two Government officials who accompanied the post.

दक्षिण भारत के मंदिरों में मूर्ति कला, भक्ति स्थान आत्मा का सुख दायक रूप मोक्ष दर्शक है और यहां दर्शन प्राप्त कर अत्यंत प्रयन्नता रूप संतोष प्राप्त होता है। स्वागत कर्त्ताओं का मैं हृदय से आभारी हूँ। यहां मेरा नृत्यु दल आ सका और दर्शन प्राप्त कर सका। यह हमारा सौ भाग्य है।

7—9—63.

विमल कुमार,

தென்னிந்திய கோயில்களில் மூர்த்தி, பக்திக்கு இடமாகவும் ஆத்மாவுக்கு சுகத்தை அளிக்கக்கூடிய வகையிலும் மோக்ஷத்தைக் காட்டும் வகையிலும் இருக்கின்றன. அவற்றை இங்குக் கண்டு மிக்க திருப்தியும் மகிழ்ச்சியும் உண்டாகிறது. வரவேற்புக் குழுவினர்களுக்கு என் உளங்கனிந்த நன்றி. என்னுடைய நாட்டிய குழுவினர் இங்கு வந்து ஈஸ்வரனைத் தரிசனம் செய்ய முடிந்தது. இது எங்களுடைய பாக்யமே ஆகும்.


7—9—63

(ஒம்.) விமல்குமார்.

## திருபுவனம் ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம் மகாகும்பாபிஷேக விழாவில்



துவஜஸ்தம்ப விநாயகர் விமான



ஸ்ரீ கம்பகரேஸ்வரர் ஸ்ரீ சோமாஸ்கந்தர்
விமானங்களின் கும்பாபிஷேகக் காட்சி.

உ
சிவமயம்

திருத்தருமையாதீனம்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி
திருக்கோயிலில்

# சாதரா நவராத்திரி விழா

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு சாதரா நவராத்திரியை முன்னிட்டு லக்ஷார்ச்சனையும், சதசண்டி யக்ஞமும் நிகழ்ச்சி நிரலில் கண்டபடி நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

| | | | |
|---|---|---|---|
| 17—10—63 | குருவாரம் | காலை | கணபதி ஹோமம். |
| ,, | ,, | மாலை | அனுக்ஞை. விக்னேஸ்வரபூஜை முதலியன. |
| 18—10—63 | சுக்ரவாரம் | காலை | கடஸ்தாபனம். யாகபூஜாஹோம ஆரம்பம். சப்தசதீ பாராயணம். சதுர்வேத பாராயணம் முதலியன. லக்ஷார்ச்சனை ஆரம்பம். |
| 26—10—63 | ஸ்திரவாரம் | காலை | சதசண்டி யக்ஞத்தில் சாதரா பட்டுவஸ்திரம்முதலிய சோபனத் திரவியஹோமம் மகாபூர்ணாகுதி. தீபாராதனை. (சரஸ்வதி பூஜை.) |
| ,, | ,, | மாலை | மண்டலபூஜை. |
| 27—10—63 | பானுவாரம் | காலை | 9-30க்கு மேல் 11-00க்குள் தனுர் லக்னத்தில் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கு சதசண்டியக்ஞ கலசாபிஷேகம். சதசண்டியக்ஞ பூர்த்தி. லக்ஷார்ச்சனை பூர்த்தி. |

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-10-63.